www.padippakam.com

# தமிழர் கண்ணோட்டம்

கோப்பு : 12
மடல் : 5
தி.பி. 2029 விடை
கி.பி. 1998 மே
விலை ரூ. 5.00




படிப்பகம்

www.padippakam.com



# நிறை குறை

### சர்வாதிகாரத்திற்கு வயது முன் நிபந்தனையா ?

தலையங்கக் கட்டுரை - பா.ஜ.க. வை - இட்லரோடு ஒப்பிட்டுக் காட்டி - இட்லர் அமைப்பு போன்றதல்ல பா.ஜ.க. என்று கூறுகிறது. பா.ஜ.க.வின் பாசிசத் தன்மையை முற்றிலும் மறுப்பதாக உள்ளது. இது சரியல்ல. மேலும் பா.ஜ.க. வின் வயோதிகத் தலைவர்கள் பாசிசத்தை விட எப்படியாவது நாற்காலி பிடிப்பதையே பெரிதும் விரும்புவார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது. சர்வாதிகாரம் செலுத்த வயது முன் நிபந்தனையா ?

பா.ஜ.க. தனி நபர்களை மட்டுமல்ல ; வலுவான தத்துவப் பின்னணியுடன் கூடிய அமைப்பினைக் கொண்ட கட்சி என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஏப்ரல் இதழில் அச்சுப் பிழைகள் மண்டிக் கிடக்கின்றன. வினா - விடை பகுதி தொடங்குங்கள்.

**– காஞ்சி அமுதன்**
காஞ்சிபுரம்

**குடந்தைத் தமிழர் உறவின் முறை.**

பிழைதிருத்தம் :

(1) மேழத்திங்கள் இதழ் 11ஆம் பக்கத்தில் "சாதி சமயமற்ற தமிழினம் படைப்போம் என்ற தொலை நோக்கோடு ..................................... சாதிவழி உறவின் இருபது குடும்பங்களோடு என்றிருப்பதில்", "சாதிவழி உறவின்" என்பதற்கு பதிலாக "தமிழர் உறவின்முறை" என்ற சொற்றொடர் இட்டுப் படிக்க வேண்டுகிறோம்.

(2) 12-ஆம் பக்கத்தில்

"ஆனால் இந்திய தேசியக் கட்சிகளிலும், திராவிடக் கட்சிகளில் இருப்பவர்கள்" என்பதற்குப் பதிலாக, "இந்திய தேசியக் கட்சிகளிலும், திராவிடக் கட்சிகளிலும் தமிழர் உறவின் முறையினர் உறுப்பாண்மை கொள்ளக்கூடாது ; இருப்பினும் ஏற்கெனவே திராவிடக் கட்சிகளில் இருப்பவர்கள்" என்று இட்டுத் திருத்திப் படித்துக்கொள்ள வேண்டுகிறோம்.

## படிப்பதற்கொரு பரிந்துரை

**சர்வதேச இனப்படுகொலைக் குற்றம் : ஸ்ரீலங்காவில் தமிழ் மக்களின் நிலை.**
வெளியீடு : தமிழ் தகவல் நடுவம், இலண்டன்
முகவரி :
*Tamil Information Centre*
*Thamil House,*
*720 Romford Road,*
*London E 12 6 BT (U.K.)*

இந்நூலை லுட்ஸ் ஒயிட் *(Luts Oette)* என்ற ஜெர்மானியர் ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். இது தமிழ்நாட்டில் ஆங்கிலத்திலும் தமிழிலும் இப்பொழுது வெளியிடப்பட்டுள்ளது.

நூலாசிரியர் லண்டனில் சட்ட முதுகலைப் பட்டம் பெற்றவர். மனித உரிமை பற்றிய ஒப்பந்தங்கள் சட்டங்கள் போன்றவற்றில் ஆற்றல் பெற்றவர்.

"இனப்படு கொலை" *(Genocide)* என்ற சொல்லின் தோற்றத்தில் தொடங்கி அதன் வரை விளக்கங்களை சான்றுகளுடன் ஆராய்ந்துள்ளார். மனித உரிமைப் பாதுகாப்பு பற்றிய ஐ.நா. மற்றும் பல நாடுகளின் ஒப்பந்தங்களையும் சட்டங்களையும் விவரித்துள்ளார்.

இலங்கையில் தமிழர் இனப் படுகோலை செய்யப்படுவது திடீரென்று தோன்றிய விபத்தல்ல அதற்கான வித்துகள் யார் யாரால் எவ்வெப்பொழுது ஊன்றப்பட்டன என்பதை அலசியுள்ளார்.

தமிழர்கள் இனப்படுகொலை செய்யப் படுவதை காலவாரியாகக் குறிப்பிட்டுள்ளார். இலங்கையில் இனப்படு கொலைக்கு எதிராக காலத்தின் தேவையாகத் தோன்றிய அமைப்பு தமிழ் ஈழ விடுதலைப் புலிகள்என்று நிறுவுகிறார்.

இலங்கை இனப் பிரச்சினையில் இந்திய அரசின் தலையீடு, எந்தெந்த வகைகளில் தவறாக அமைந்தது என்பதையும் சுட்டிக்காட்டுகிறார்.

தமிழ் ஈழ ஆதரவாளர்கள் மட்டுமின்றி, தனி ஈழ எதிர்ப்பாளர்களும் படித்து உண்மைகளைக் கண்டறிய வேண்டிய நூல் இது.

படிப்பகம்

www.padippakam.com

தமிழர் கண்ணோட்டம்

மே 1998

அனைத்து தொடர்புகளுக்கும் :

பெ. மணியரசன், ஆசிரியர்
53 (அ) சமீந்தார் குடியிருப்பு
புது ஆற்றுச்சாலை,
தஞ்சாவூர் - 613 001

வெளியிடுபவர் :

அ. பத்மநாபன்
625, என்.வி.என்.நகர், திருமங்கலம்,
அண்ணாநகர் (மேற்கு)
சென்னை - 43

அச்சிட்டோர் :

நீட் பிரிண்டர்ஸ்,
சென்னை - 600 003.

வடிவமைப்பு :

கரன் கணினி, நெய்வேலி. ✆ : 54324, 52301

## உள்ளே


- பா.ஜ.க. வின் வர்த்தக கொள்கை
- தமிழ் நாடகம் - நவீன தேடல்கள்
- அயர்லாந்து விடுதலைப் போராட்டம்
- தஞ்சை மண்ணுக்கு வன்னியர் புறக்குடிகளா ?
- கொசோவோ விடுதலைப் போராட்டம்
- கோவைக் கலவரம் - உண்மை என்ன?
- கும்பல் பண்பாடும், 356 ம்


தன்னுரிமைப் போருக்கு முன்னுரிமை கொடுப்போம்
தமிழ்த் தேச வரலாற்றில் புதுயுகம் படைப்போம்

## ஊழலை மறைக்க ஊழல் குற்றச்சாட்டு

எது முதலில் கவிழும் ? வாஜ்பாய் அரசா அல்லது கலைஞர் கருணாநிதி ஆட்சியா ? என்பதே இன்று அரசியல் வட்டாரத்திலும், பத்திரிக்கைகளிலும் பேசப்படும் முக்கிய பேச்சாக இருக்கிறது. இவை இரண்டுக்கும் மையப்புள்ளியாக இருப்பவர் ஜெயலலிதா தான்.

ஊழல் குற்றச்சாட்டுக்குள்ளான தில்லி அமைச்சர்கள் பதவி விலக வேண்டும் என்று ஜெயலலிதா கோரி வருகிறார். ஊழல் குற்றச்சாட்டில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட உடனேயே ஜெயலலிதா 'ஆணைப்படி' சேடப்பட்டி முத்தையா பதவி விலகினார். உண்மையில் பத்திரிக்கை விமர்சனங்களுக்கு அஞ்சி வாஜ்பாய் வற்புறுத்தியதாலேயே இது நிகழ்ந்தது.

இதனைத் தொடர்ந்து இதே போன்று ஊழல் குற்றச்சாட்டுக்கு உள்ளான பூட்டாசிங், ராமகிருஷ்ண ஹெக்டே, ராம்ஜேத்மலானி ஆகியோரும் பாபர் மசூதி இடிப்புச் குற்றச்சாட்டிற்கு உள்ளான அத்வானி, முரளி மனோகர் ஜோஷி, உமா பாரதி ஆகியோரும் பதவி விலக வேண்டும் என்றும் ஜெயலலிதா வலியுறுத்தினார். இது வாஜ்பாய் அரசுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

ஊழல் குற்றச்சாட்டுக்கு உள்ளானவர்கள் அமைச்சர் பதவியில் நீடிக்கக் கூடாது என்பது மிகச்சரியே. ஆனால், ஜெயலலிதா அதனைக் கோருவது நல்ல நோக்கத்தில் அல்ல. ஏனெனில் இந்த வழக்குகளெல்லாம் ஏதோ புதிதாக நேற்று முளைத்தவை அல்ல. இவர்கள் அமைச்சர் பதவி ஏற்கும் போதே இந்தக் குற்றச் சாட்டுகள் இருந்தன. அத்வானி வகையறாக்கள் மீது பாபர் மசூதி இடிப்பு குற்றச்சாட்டு இருப்பதும் புதிய செய்தி அல்ல.

தூய்மையான ஆட்சி என்பதில் உண்மையான அக்கறை இருந்திருந்தால் இவர்கள் பதவி ஏற்கும் போதே அதைத் தடுக்க ஜெயலலிதா முன் வந்திருப்பார்.

ஜெயலலிதாவின் உண்மையான நோக்கம் ஊழல் ஒழிப்பு அல்ல. ஏனெனில் ஊழலில் ஒரு உச்சத்தைத் தொட்டவர் அவர்.

தன் ஊழலை மறைக்கவே மற்றவர்கள்



படிப்பகம்

www.padippakam.com

மீதான ஊழல் குற்றச்சாட்டைப் பயன்படுத்திக் கொள்கிறார் ஜெயலலிதா.

இந்த நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளவே வாஜ்பாய் ஆட்சிக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகிறார். இதே நோக்கத்திலேயே தி.மு.க. ஆட்சியைக் கலைக்க கோருகிறார்.

வருமானத்திற்கு மீறிய சொத்து சேர்த்த வழக்கு, டான்சி நிலபேர ஊழல், டிட்கோ ஊழல், பிளசன்ட் ஸ்டே விடுதி ஊழல் என்று ஜெயலலிதா மீது மிகப் பெரிய வழக்கு பட்டியலே உண்டு. இவற்றுள் வருமானத்திற்கு மேல் சொத்து சேர்த்த வழக்கு போன்ற ஒன்றிரண்டு தில்லி அரசு வழக்குகள் தவிர மற்ற பெரும்பாலான வழக்குகள் தமிழக அரசால் போடப்பட்டவை.

தமிழக அரசு தொடுத்த வழக்குகளிலிருந்து தப்பிப்பதற்காக இவ்வரசைக் கலைக்குமாறு வலியுறுத்துகிறார் ஜெயலலிதா. ஜெயலலிதாவின் இக்கோரிக்கையை வாழப்பாடி இராமமூர்த்தியும், டாக்டர். இராமதாசும் உரத்த ஒலியில் ஒலிபரப்பி வருகிறார்கள். சுப்பிரமணியசாமி பற்றி சொல்ல வேண்டியதே இல்லை. மிரட்டி, பேரம் பேசும் அரசியல் தரகர் அவர்.

ஜெயலலிதா நிர்ப்பந்தத்தை ஏற்று கருணாநிதி ஆட்சியை வாஜ்பாய் கலைக்காமல் இருப்பதற்குக் காரணம் மக்களாட்சியை மதிப்பதால் அல்ல. இதில் வாஜ்பாய்க்கு இரண்டு சிக்கல்கள் இருக்கின்றன.

1. அரசமைப்புச் சட்டப்படி 356-ஆவது விதியைப் பயன்படுத்தி ஒரு மாநில ஆட்சியைக் கலைத்தால், கலைத்த இரண்டு மாதத்திற்குள் நாடாளுமன்றத்தின் ஒப்புதலைப் பெற வேண்டும். அவ்வாறு ஒப்புதலைப் பெறாவிட்டால் ஆட்சிக்கலைப்பு ஆணை செல்லாமல் போகும். பா.ஜ.க. கூட்டணியிலுள்ள அகாலிதளமோ, வெளியிலிருந்து ஆதரவு தரும் தெலுங்கு தேசம், தேசிய மாநாட்டுக் கட்சி ஆகியவையோ ஆட்சிக் கலைப்பிற்கு ஒப்புதல் தருமா என்பது ஐயத்திற்கு இடமான வேள்வி.

2. கூட்டணியிலுள்ள சமதா கட்சி, திருனமுல் காங்கிரஸ், பிஜு ஜனதாதளம் ஆகியவை முறையே பீகார், மேற்கு வங்கம், ஒரிசா அரசுகளைக் கலைக்க வேண்டும் என்று கோரி வருகின்றன. தமிழக அரசு கவிழ்க்கப் பட்டால் அது அவர்கள் கோரிக்கைக்கு வலு சேர்க்கும். இப்படி ஒவ்வொரு மாநில ஆட்சியாக கலைத்துக் கொண்டே போனால் மக்கள் மத்தியில் கடும் அவப்பெயர் ஏற்படும் என்று வாஜ்பாய் அஞ்சுகிறார்.

ஆயினும் தனது பதவியைப் பாதுகாத்துக் கொள்வதற்காக ஜெயலலிதா கோரியபடி பூடாசிங்கை பலி வாங்கினார் வாஜ்பாய். ஜேத்மலானி, ஹெக்டே ஆகியோரிடம் விளக்கம் கேட்டு பதில் பெற்றுள்ளார்.

ஜெயலலிதா மீதான ஊழல் வழக்குகளைக் கவனித்து வந்த வருமான வரித்துறை அதிகாரிகள் மாற்றப்பட்டுள்ளனர். தில்லி அரசின் சார்பில் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு நடத்தி வரும் 33 வழக்குரைஞர்கள் நீக்கப்பட்டு, அவர்களுக்குப் பதிலாக அ.தி.மு.க. வைச் சேர்ந்த 33 வழக்குரைஞர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஜெயலலிதா மீதும், அ.தி.மு.க.வின் முன்னாள் அமைச்சர்கள் நீதும் உள்ள பல்வேறு வழக்குகளில் ஜெயலலிதாவை எதிர்த்தும், அ.தி.மு.க தலைவர்களை எதிர்த்தும் அ.தி.மு.க. வழக்கறிஞர்களே இனி வாதாடுவார்களாம்! இதே போன்று மாவட்ட நீதி மன்றங்களுக்கும் தில்லி அரசு சார்பில் அ.தி.மு.க. வழக்குரைஞர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தன் நாற்காலியைப் பாதுகாத்துக் கொள்ள ஜெயலலிதா பரிவாரத்தின் ஊழல் வழக்குகளை ஒன்றுமில்லாமல் செய்ய வாஜ்பாய் முன் வந்துள்ளார்.

‘திறமையான பிரதமரின் நேர்மையான ஆட்சி’ தில்லியில் இவ்வாறு நடக்கிறது.

தமிழக அரசு சார்பில் ஜெயலலிதா மீது தொடுக்கப்பட்டுள்ள ஊழல் வழக்குகளை குழப்ப வேண்டுமே. அதற்காக தமக்கு ஒத்துவராத சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி லிப்ரானை மாற்ற வாஜ்பாய் அரசு முயன்றது. இது தமிழக வழக்குரைஞர்கள் மத்தியிலும், பத்திரிகைகள் மத்தியிலும் கடும் எதிர்ப்பை ஏற்படுத்தியதால் அப்படியே நிற்கிறது.

தி.மு.க. அரசைக் கலைக்க வேண்டுமானால் அதற்கு ஏதோ ஒரு வகையில் காங்கிரஸ் ஆதரவு வேண்டும். இல்லை யென்றால் முடியாது. இதனால் ஜெயலலிதா சரத்பவார் இடையே கமுக்கமான பேரம் நடைபெறுவதாக பேச்சு அடிபடுகிறது.

மறுபக்கம் கருணாநிதி பா.ஜ.க.வுடன் சமரசம் செய்து கொள்ள முனைவாரோ என்ற ஐயமும் எழுந்துள்ளது. ‘என் ஆட்சியைப்பலி கொடுத்தால் வாஜ்பாய் அரசு பிழைக்கும் என்றால் அது எனக்கு மகிழ்ச்சியே’ என்று கலைஞர் புலம்பியதும், இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டியதில்லை என்று பா.ஜ.க. மாநில செயலாளர் இல. கணேசன், இந்து முன்னணி இராம.கோபாலன் ஆகியோர் கூறுவதும் இந்த ஐயத்தை ஏற்படுத்துகின்றன.

ஊழல் வழக்குகளிலிருந்து தப்பிக்க ஊழல் குற்றச்சாட்டுகளை எழுப்புகிறார் ஜெயலலிதா.

தன் ஆட்சியை பாதுகாத்துக் கொள்ள இந்த ஊழலுக்கு துணை போகிறார் வாஜ்பாய்.



படிப்பகம்

www.padippakam.com

# பா.ஜ.க. வின் வர்த்தகக் கொள்கை :
# பழைய கள்

- கி. வெங்கட்ராமன்

'சொல்வது ஒன்று, செய்வது வேறொன்று' என்பது பாரதிய ஜனதாவின் வாடிக்கை. ஒழுக்கம் சார்ந்த அரசியல் என்று பா.ஜ.க பேசும். ஆனால் உ.பி.யில் நாற்காலியைப் பாதுகாத்துக் கொள்ள மந்திரி பதவிகளை அள்ளி வீசி கட்சிமாறிகளைப் பிடிக்கும். ஊழலை ஒழிப்பதாக கூரைமீதேறி கூப்பாடு போடும். ஆனால் ஊழலே உருவான ஜெயலலிதாவோடும் சுக்ராமோடும் கூட்டணி சேரும்.

இந்த வரிசையில் இப்போது மேலும் ஒன்று. 'சுதேசி பொருளாதாரம் உள்நாட்டு தொழில்களைப் பாதுகாப்பது' என்று வாய்கிழியப் பேசிய வாஜ்பாய் ஆட்சி, இப்போது பன்னாட்டு முதலாளிகள் இந்நாட்டைச் சூறையாட புதிய அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

ஏற்றுமதி - இறக்குமதிக் கொள்கையில் சில மாறுதல்களைச் செய்வதாக வாஜ்பாய் ஆட்சியின் வர்த்தக அமைச்சர் இராமகிருஷ்ண ஹெக்டே ஏப்ரல் 13-ஆம் தேதி ஒரு அறிவிப்பை வெளியிட்டார்.

இதன்படி, இதுவரை கட்டுத்திட்டங்களுக்கு உட்பட்டிருந்த பொருட்களில் மேலும் 340 பொருட்கள் தாராள இறக்குமதிப்பட்டியலில் *(Open General Lincence)* சேர்க்கப்பட்டன. இவற்றில் எதுவுமே இந்தியாவில் உற்பத்தியாகாத பொருட்களோ, உற்பத்தி செய்ய முடியாதவைகளோ அல்ல. இனி, சவர பிளேடு, குளியல் சோப், பழவகைகள், காய் வகைகள், பதப்படுத்தப்பட்ட உணவுப் பண்டங்கள், கடல் உணவுப் பொருட்கள் ஆகியவை தாராளமாக இறக்குமதி செய்து கொள்ளப்படலாம்.

வெங்காயம், வெள்ளரி, மாங்கனி, மிளகு, ஏலம், மஞ்சள் தேங்காய், ரப்பர், கடல் மீன் வகைகள்,இறால், கடல் நண்டு என்று இந்த இறக்குமதிப் பட்டியல் நீள்கிறது.



இதன் விளைவு படுபாதகமானது. உள்நாட்டுத் தொழில்களை - குறிப்பாக பணப்பயிர் வேளாண்மையை, மீன்பிடித் தொழிலை ஹெக்டேயின் அறிவிப்பு கடுமையாக பாதிக்கும்.

தேங்காய் இறக்குமதியை எடுத்துக் கொள்வோம். இந்தியாவில் ஆண்டுக்கு 1000 கோடி தேங்காய் உற்பத்தியாவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்தியத் தேங்காய் உற்பத்தியில் கேரளாவுக்கு அடுத்து இரண்டாவது இடத்தில் தமிழ்நாடு உள்ளது. சுமார் 23% தேங்காய் தமிழகத்தில் விளைகிறது. தேங்காய்ப் பொருட்களுக்கு வெளிநாட்டில் நல்ல வரவேற்பு உள்ளது.

இப்போது தாராள இறக்குமதிப் பட்டியலில் தேங்காயும் சேர்க்கப்பட்டுள்ளதால் பிலிப்பைன் சிலிருந்தும், இந்தோனேசியாவிலிருந்தும், இலங்கை யிலிருந்தும் தேங்காய் இங்கே வந்து குவிய வாய்ப்புள்ளது. இது உள்நாட்டில் உற்பத்தியாகும் தேங்காய் விற்பனையை பாதித்து, தென்னைச் சாகுபடியையும் பாதிக்கும்.

ஏற்கெனவே நரசிம்மராவ் ஆட்சியில் மீன்பிடி உரிமம் பன்னாட்டு நிறுவனங்களுக்கும், வடநாட்டுப் பெருமுதலாளிகளுக்கும் வழங்கப் பட்டதால் மீனவர்கள் துயரத்திற்கு ஆளாகினர். இப்போது மீன், கடல் நண்டு, இறால் இறக்குமதி தாராளமாக்கப்பட்டு விட்டதால் மீன் பிடித் தொழில் கடுமையாக பாதிக்கப் படும் ஆபத்து சூழ்ந்துள்ளது.

இப்போதே குளியல் சோப்பு, சலவை சோப்பு ஆகியவற்றின் சந்தையில் பன்னாட்டு முதலாளி களும், சில மார்வாடி முதலாளிகளும் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். லைப்பாய், லக்ஸ், லிரில், ஹமாம், பியர்ஸ், ரெக்சோனா ஆகியன இந்துஸ்தான் லீவருடையவை.



படிப்பகம்

www.padippakam.com

சிந்தால் காட்ரேஜிற்குச் சொந்தம். டெட்டால் சோப்பு ரெக்கெட் கால் மன் தயாரிப்பு.

பல நூறு கோடி ரூபாய் செலவில் வித விதமாக விளம்பரம் செய்வதன் வழியிலும், இலவசப் பொருட்கள் வழங்கியும் இந்நிறுவனங்கள் சந்தை ஆதிக்கத்தை நிறுவுகின்றன. அவற்றைவிட தரமாக இருந்தாலும் உள்ளூர் தயாரிப்பு சோப்புகள், குறிப்பாக கதர் வாரியத் தயாரிப்புகள் போட்டியிட முடியாமல் நசிந்து வருகின்றன.

இந்நிலையில் சோப்பு இறக்குமதியை பா.ஜ.க. அரசு தாராளமாக்கி உள்ளது இந்நெருக்கடியைத் தீவிரப்படுத்தும்.

இறக்குமதி பொருள் குவிப்பிற்கு எதிராக *(antidumping)* நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஹெக்டே அறிவித்துள்ளது திசை திருப்பும் பேச்சே ஆகும். தாராள இறக்குமதியை அனுமதித்துவிட்டு, பொருள் குவிப்பை எதிர்த்து நடவடிக்கை எடுப்பேன் என்பது வெற்றுக் கூச்சலே தவிர வேறொன்றுமில்லை.

மேலும், உலக வர்த்தக அமைப்பின் டங்கல் திட்டத்திற்கு ஏற்ப இந்திய காப்புரிமைச் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்படும் என்றும் ஹெக்டே அறிவித்துள்ளார்.

காங்கிரஸ், ஐக்கிய முன்னணி பாணியிலேயே பா.ஜ.கவும் நடைபோடுகிறது. அதனால்தான் முன்னாள் நிதியமைச்சர் ப. சிதம்பரம், ஹெக்டே அறிவித்துள்ள ஏற்றுமதி - இறக்குமதிக் கொள்கையைப் பாராட்டுகிறார்.

பா.ஜ.க. ஆட்சியின் சுதேசி முக விலாசம் இதுதான். ✡

**பயனுள்ள அன்பளிப்பு**

திருமணம் மற்றும் பிற நிகழ்ச்சிகளுக்கு தரும் அன்பளிப்பைப் பயனுள்ளதாக அளியுங்கள்.

தமிழ்த் தேசிய எழுச்சியின் போர்வாள், தமிழ்த் தேசிய மாத இதழ் **தமிழர் கண்ணோட்டத்தின்** ஓராண்டுச் சந்தாவை அன்பளிப்பாக அளியுங்கள்.

அன்பளிப்புக்கென சிறப்பு இரசீது உங்களுக்கு அளிக்கப்படும். அதில் உங்கள் பெயரும் குறிக்கப்பட்டிருக்கும். அன்பளிப்பு இரசீதை நிகழ்ச்சியின் நாயகருக்கு பெருமையுடன் வழங்குங்கள். தொடர்ந்து ஓராண்டிற்கு **"தமிழர் கண்ணோட்டம்"** அவரைச் சென்றடையும்.

உங்கள் அன்பளிப்பின் தரம் என்றும் அவர் நினைவில் நிற்கும்.

ஆசிரியர்
தமிழர் கண்ணோட்டம்.

## மணமக்கள் வாழ்க !

மணமகன் : **நம்பிராசன்**
த.இ.மு., திருவையாறு, ஒ.செ.கு. உறுப்பினர்
மணமகள் : **சாந்தி**
மணநாள் : 31.03.98
இடம் : திருவையாறு
மணமக்களுக்கு வாழ்த்துக்கள் !
தமிழர் கண்ணோட்டத்திற்கு அன்பளிப்பு
ரூ. 100.00 வழங்கினர்

மணமகன் : **சு. வாணிதாசன்,** எம்.காம்.,
மணமகள் : **ஆர். சந்திரா,** பி.எஸ்.சி.,
மணநாள் : 05.04.98
இடம் : பூதலூர்
மணமக்களுக்கு வாழ்த்துக்கள் !
தமிழர் கண்ணோட்டத்திற்கு அன்பளிப்பு
ரூ. 150.00 வழங்கினர்

மணமகன் : **பாலசுப்ரமணியன்**
மணமகள் : **ஜானகி**
மணநாள் : 08.04.98
இடம் : காமாட்சிபுரம்
மணமக்களுக்கு வாழ்த்துக்கள் !
தமிழர் கண்ணோட்டத்திற்கு அன்பளிப்பு
ரூ. 100.00 வழங்கினர்

மணமகன் : **கோ. முருகானந்தம்**
மணமகள் : **உஷா**
மணநாள் : 01.04.98
இடம் : பாமணி
மணமக்களுக்கு வாழ்த்துக்கள் !
தமிழர் கண்ணோட்டத்திற்கு அன்பளிப்பு
ரூ. 100.00 வழங்கினர்

மணமகன் : **செ. முருகேசன்** (மருவூர்)
மணமகள் : **கு. கண்ணகி** (அந்திலி)
மணநாள் : 12.04.98
இடம் : திருக்காட்டுப்பள்ளி
மணமக்களுக்கு வாழ்த்துக்கள் !
தமிழர் கண்ணோட்டத்திற்கு அன்பளிப்பு
ரூ. 250.00 வழங்கினர்



படிப்பகம்

www.padippakam.com

# ஊர் உலகம்

## இந்தோனேசியா :

### திவாலாகும் வங்கிகள் முன் பீதியுடன் மக்கள் கூட்டம்

இந்தோனேசியாவில் வரலாறு காணாத பொருளாதார நெருக்கடி. வங்கிகள்ஓட்டாண்டி நிலைக்கு தள்ளப்பட்டுவிட்டன.

ஏப்ரல் 4-ஆம் தேதிய சுகார்டோ அரசின் அறிவிப்புப்படி இந்தோனேசியாவில் இயங்கி வந்த வங்கிகளில் ஏழு வங்கிகள் இழுத்து மூடப்பட்டன. மேலும் ஏழு வங்கிகள் அரசின் "ஒழுங்கு முறை வாரியக்" கட்டுப்பாட்டின் கீழ் இயங்க பணிக்கப்பட்டன.

இந்த வங்கிகளும் திவலாகிவிடுமோ என்ற பீதியில் இவ்வங்கிகளில் பணம் போட்டவர்கள், தங்கள் சேமிப்புக் கணக்கை ரத்து செய்து பணத்தைத் திரும்ப பெற விரும்பினர்.

வங்கிகளில் வாடிக்கையாளர்களின் நீண்ட வரிசை; பெருங் கூட்டம். வட்டி வேண்டாம் - அசல் பிழைத்தால் போதும் என்ற நிலை. கூட்டத்தைக் கட்டுப்படுத்த காவல்துறை பெரும்பாடுபட்டதாக செய்திகள் கூறுகின்றன.

நல்ல நிலையில் உள்ள வங்கிகளில் கூட "இந்த வங்கி திவால் ஆகாது" என்று பல கைகள் தொங்குகின்றன.

உலக மயமாக்கல் பொருளாதாரமும், திறந்த நாணய மாற்றுக் கொள்கையும் இந்தோனேசிய மக்களுக்கு அளித்துள்ள 'பரிசு' இது.

முன்னால் போகிறவன் தடுக்கி விழுந்தால் பின்னால் நடக்கிறவன் எச்சரிக்கையாகி விட வேண்டும்.

இந்திய ஆட்சியாளர்கள் எச்சரிக்கை அடைவார்களா?

## போல்பாட் மரணம்

கம்போடியாவின் முன்னாள் பிரதமர் போல்பாட் 1998 ஏப்ரல் 15 ஆம் நாள் காலமானார்.

போல்பாட்டுக்கு *(Polpot)* வயது 70. இவரது இயற்பெயர் சலோத்சார். இவர் இளம் வயதில் படிப்பிற்காக பிரான்ஸ் சென்றபோது அங்கு பொதுவுடைமை இயக்கத் தொடர்பு ஏற்பட்டது. கம்போடியாவிற்கு வந்து முதலில் ஆசிரியர் வேலையில் சேர்ந்தவர். பிறகு கேமர்ரூஜ் என்ற விடுதலைப் படையை நிறுவி, புரட்சிக்குத் தலைமை தாங்கினார்.

புரட்சியின் வெற்றிக்குப் பிறகு 1975இல் கம்போடியப் பிரதமரான சலோத்சார் தனது பெயரை போல்பாட் என மாற்றிக் கொண்டார். மார்க்சியத்தைப் பிறழ்ச்சியாகப் புரிந்து கொண்ட போல்பாட் கம்போடியாவில் புரட்சி வெற்றி பெற்றவுடனேயே மதம்



ஒழிக்கப்பட்டது என அறிவித்தார். மதம் மட்டுமின்றி, பணமும் தடை செய்யப்பட்டது என அறிவித்தார்.

நகர்ப்புற மக்களை கிராமங்களுக்குச் சென்று உழைக்குமாறு ஆணையிட்டார். மறுத்தவர்கள் தொகை தொகையாக சுட்டுக் கொல்லப்பட்டனர்.

எல்லாம் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் என்ற பெயரால் நடைபெற்றன.

ஆயினும் 1979-இல்அவரது ஆட்சி வீழ்ந்தது. ஹெங்சாமரின் தலைமையில் புதிய ஆட்சி ஏற்பட்டது. இதற்கு வியட்நாமின் ஆதரவு இருந்தது. போல்போட்டும் அவரது கேமர்ரூஜ் படையும் கம்போடியா - தாய்லாந்து எல்லைப் பகுதிக் காடுகளுக்கு பின் வாங்கினர்.

சென்ற ஆண்டு கேமர்ரூஜ்ஜில் பிளவு ஏற்பட்டது. இவருக்கு அடுத்த நிலைத் தலைவராக இருந்த இயாங்சாரி தலைமையில் பெரும் பகுதியினர் வெளியேறினர். இயாங்சாரியால் போல்பாட் தலை மறைவு வாழிடத்திலேயே வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார்.

சில காலமாக நோய் வாய்ப் பட்டிருந்த போல்பாட் ஏப்ரல் 15- அன்று மரணமடைந்தார்.

## கனடா : சுரேஷ் விடுதலை

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நிதி திரட்டல் மற்றும் ஆதரவு நடவடிக்கையில் ஈடுபட்டார் என்பதற்காக தோழர். மாணிக்கவாசகம் சுரேஷ் கனடா அரசால் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் கைது செய்யப்பட்டார்.

அவரை நாடு கடந்த கனடா அரசு உத்தரவிட்டது.

அதனை எதிர்த்து கனடா ஒன்றிய நீதிமன்றத்தில் (உச்ச நீதி மன்றத்தில்) சுரேஷ் வழக்குத் தொடர்ந்தார். நாடுகடத்தல் உத்தரவை தடை செய்த நீதிமன்றம், சுரேஷை பிணையில் விடுதலை செய்துள்ளது.

நம்மூர் தடா நீதிபதியும் உச்சநீதிமன்றமும் இதனைக் கவனிக்கட்டும்.

- சிந்து



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ் நாடகம் - நவீன தேடல்கள்

முனைவர் மு. இராமசாமி

ஒவ்வொரு காலத்தும் அவ்வக் காலத்துச் சமூக ஏற்பிற்கேற்ப நாடகமானது தனக்கான குணங்களோடு விளங்கி, பின் அளவுநிலை மாற்றத்தினூடே ஒரு புதிய குணநிலை மாற்றத்தை நோக்கி விரையும். நவீனம் என்பது அவ்வக்காலங்களிலான குணநிலை மாற்றம். வாழும் காலத் தேவைக்கேற்ப மனிதனை-மனிதச் செயல்பாடுகளைப் புதிய அர்த்தமுள்ள பார்வையில் பார்த்தல். அந்த வகையில் வாழும் காலத்தேவைக் கேற்ற நவீன நாடக மரபை உருவாக்கத் துடிக்கும் தேடல்கள், சோதனை நாடக முயற்சிகள் கலகக்காரக் குணாம்சமுடைய படைப்பாளிகளால் படைப்புலகில் தொடர்ந்து நிகழ்ந்துவரும். உருவாக்கி வைத்திருக்கும் வாழ்க்கை மதிப்புகளை அவை கேள்விக்குட்படுத்தும். தத்துவார்த்த அழகியல், வெளித்தெரிய வந்த புதிய கலை வடிவங்களின் பாதிப்புக்கள் மற்றும் சமூக அரசியல் காரணிகளால் படைப்பு மனநிலையுள் ஏற்படும் கலகத்தன்மை படைப்பாளியின் கருத்துருவை-படைப்புருவைப் பாதிக்கும். இப் பாதிப்புகளே புதிய தேடல்களாகிப் படைப்பு நிலையில் கலகக் குணாம்சமுடைய சோதனைகளாக வெளிப் படும். இத் தேடல்கள் படைப்புலகின் கருத்துருவ முரண்களை-சமூக முரண்களைப் பாதிப்பிற்குள்ளாக் காத நிலையில் அவை வெறும் சோதனைகளாக மட்டுமே தங்கிடும். தன் பாதிப்புகளைப் படைப்புலகில்-சமூகத்தில் இருத்தத் தொடங்குகையில் அது நவீன மரபை உருவாக்கும்.

ஒவ்வொரு காலத்தும் பழைய தடத்தினின்றும் ஒரு பாய்ச்சலுடன் வெளிப்பட்டுப் புதிய குணநிலை மாற்றத்தை உருவாக்கி அதன் தடத்தில் நடைபயிலும் நாடகங்கள் நவீனநாடகங் களாகின்றன. நவீனம் ஒவ்வொரு காலத்தும் அழுந்தத் தடம்பதிக்கும் வரையில் இருந்து, அளவுநிலை மாற்றங்களூடே, காலத் தேவைக்கேற்ப இன்னொரு புதிய நவீனத்தை உருவாக்கித் தடம் பதிக்கும். எழுபதுகளின் பிற்பகுதியில் நவீன நாடக முயற்சிகளின் தோற்றத்திற்கான பதியங்கள் உருவாகத் தொடங்கின வெனில், அதற்கு முந்தையத் தமிழ் நாடகச் சூழல் பற்றிய கணிப்பும், எதன் காரணமாக நவீன நாடகத் தேடல் அவசியமாகிறது என்கிற கருத்தும், உருவாக்கி வைத்திருக்கும் நாடகப் படிமத்தை அவை எவ்விதம் கேள்விக்குட்படுத்தும் என்கிற விளக்கமும் அவசியமாகின்றன.

1891-ஆம் ஆண்டு - இந்த ஆண்டில்தான் சுந்தரம்பிள்ளை எழுதிய கவிதை நாடகம் மனோன்மணீயம் வெளிவந்தது. இந்த ஆண்டில்தால் சங்கரதாஸ்சுவாமிகள் (1867-1922) நாடகங்களில் நடிப்பதை விட்டு, மதுரையில் சமரச சன்மார்க்க நாடக சபா எனும் பாலர் நாடக சபை நிறுவி அவர்களின் மூலம் நாடகங்கள் நிகழ்த்தி வந்தார். (ஏ.என். பெருமாள் டிசம்பர் 1988; 103). இந்த ஆண்டில் தான் பதினெட்டு வயதான சம்பந்த முதலியார் நாடக கலை மீது கொண்ட ஈடுபாட்டின் காரணமாக சென்னையில் சுகுணவிலாச சபா என்ற நாடகக் குழுவைத் தொடங்கி, 'புஷ்பவல்லி' என்ற தமிழ் நாடகத்தைச் சென்னையில் அரங்கேற்றினார். அந்த நாள் தமிழ்நாடக வளர்ச்சிப் பதிவேட்டில் ஒரு புது அத்தியாயமாகவும், நாடக வளர்ச்சிப் பாதையில் ஒரு மைல்கல்லாகவும் அது அமைந்தது 102) என்கிறார். டாக்டர் ஏ.என்.பெருமாள் குப்பி வீரண்ணாவின் கன்னட நாடகக் குழுவினரின் எழுச்சிமிக்க நடிப்பையும், சிறப்புமிக்கக் காட்சி அமைப்பையும் கண்ட சென்னை நகரத் தமிழ் நாடகக் குழுக்களும் முன்னேறும் ஆவலுடன் தங்கள் நாடகங்களில் புதுமைகளைப் புகுத்தத் தொடங்கினர் (மேற்படி 112). 1920-30 களில் தமிழ் நாடக வளர்ச்சியில் நவாப் ராஜமாணிக்கத்தின் பங்கு குறிப்பிட்டுச் சொல்லத்தக்கது.

நவீன அறிவியல் உத்திமுறைகளைக் கையாண்டு தந்திரக் காட்சிகளை நாடகங்களில் அமைத்து மக்களை வியப்புக் கடலில் ஆழ்த்தியதில் நவாப் ராஜமாணிக்கம் வல்லவர் ... அவரின் 'தசாவதாரம்' நாடகத்தில் கிருஷ்ணன் பிறந்ததும், சிறைக் காவலன் தானாக மயங்கி இருக்க, இரும்புச்சாவி தானே நகர்ந்து கதவிலுள்ள பூட்டைத் திறக்கும். பூட்டு நகர்ந்து விழுந்ததும் கதவு திறந்து கொள்ளும் ... நாடக மேடையில் இவை வியப்புறு செயல்களாக அமையும். பிறந்த குழந்தையைக் கூடையிலிட்டு தலைமீது வைத்து தந்தையான



படிப்பகம்

www.padippakam.com

வாசுதேவர் சுமந்து செல்வார். அப்பொழுது நாடக மேடையில் மழைபெய்வது போன்று காட்டப்படும். அதைத் கண்டு நாகப்பாம்பு ஒன்று கூடைக்குமேல் படம் விரித்துக் குழந்தையின் மீது மழை விழாதவாறு குடைபிடிக்கும். யமுனை நதியை வாசுதேவர் கடக்கும்போது அது இரண்டாகப் பிரித்து வழி கொடுக்கும் ... நதிநீர் அலம்புவதும், அதில் மீன்கள் துள்ளி விளையாடுவதும் கண்களுக்கு விருந்தளித்து மனதிற்கு வியப்பளிக்கும்

இதே காலகட்டத்தில் தேசிய சுதந்திரக் கருத்தாக்கங்களைத் தம் நாடகங்களில் புகுத்தித் தேசிய உணர்வுமிக்க நாடகங்கள் பலவற்றை மேடையேற்றிய விஸ்வநாததாஸ், தெ.பொ.கிருஷ்ண சாமிப் பாவலர், டி.கே.எஸ். சகோதரர்கள் போன்றோர் முக்கியமானவர்கள். விஸ்வநாததாஸ் தன் வள்ளித் திருமணம் நாடகத்தில் 'ஆயிரம் மைல்களுக்கப் பாலிருந்து வந்து எங்கள் தானியங்களை அபகரித்தே செல்கின்ற வெள்ளைக் கொக்குகளா ... சோ ....சோ...' என்று கொக்குகளை விரட்டிப் பாடுவதாகக் கூறப்படும் பாடல் இன்றும் பிரமிப்பைத் தரத்தக்கது.

1940-50 களின் காலக்கட்டத்தில் திராவிட இயக்கத்தின் பங்களிப்பு நாடக உலகில் பெரிதுபடப் பேசப்படலாயிற்று. சமூக சீர்த்திருத்தம், மூட நம்பிக்கைக்கு எதிர்ப்பு, பிராமணீய எதிர்ப்பு போன்றவை அதன் கருத்தாக்கங்களாயிருந்தன. உரையாடல்களில் தமிழ்மொழி நடை ஒரு புதுப்புனைவுடன் வரத்தொடங்கியது. வேதிய மதவாதத் தமிழ்ச் சமூகத்தின் மீது விமர்சனச் சொல்லம்புகளைக் கொண்ட எம்.ஆர். இராதாவின் நாடகங்கள் இக் காலக்கட்டத்தில் தனிக் கவனம் பெற்றன.

1950-60 களின் காலக்கட்டத்தில் தமிழ் நாடக மேடைக்குச் சகஸ்ரநாமத்தின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. 'நாடகம் சினிமாவின் பிரதிபலிப்பாகவே தெரிகிறது. இது வருந்தத் தக்க நிலை. நாடகம் வேறு, சினிமா வேறு, நாடகத்திற்கென்று தனியான சில சிறப்பு அம்சங்கள் உண்டு' (மேற்படி 133) என்று கண்டு, கலைஞர் கலாசாகரம் ராஜகோபால், ஆசிய நாடக நிறுவனத்தில் *(Asian Theatre Institute)* பயிற்சி பெற்ற என்.வி. ராஜாமணி ஆகியோர் துணையுடன் சில புதிய சோதனை முயற்சிகளைச் செய்து பார்த்தவர் சகஸ்ரநாமம். ஆயின் அம் முயற்சிகளை வெளித் தெரியச் செய்யும் சிறப்பான உள்வட்டச் சூழல் தொழில்முறைக் குழுவாக இயங்கிவந்த அவரது சேவா ஸ்டேஜிற்கு சரியாக இல்லாது போனது என்பது வருந்துதற்குரியது.

1960-70 காலக்கட்டத்தில் சோ, பாலச்சந்தர், ஒய்.ஜி. பார்த்தசாரதி, கோமல் சுவாமிநாதன், ஆர்.எஸ். மனோகர் போன்ற பலரின் நாடகக் குழுக்களின் செயல்பாடுகள் இன்னொரு புதிய தளத்திற்குத் தமிழ் நாடகத்தைக் கொண்டு சென்றன. இந்தக் கட்டத்தில்தான் பயின்முறை நாடகக் குழுக்களும் பலவாகப் பெருகின. என்.எஸ்.கே., எம்.ஆர். இராதா, அண்ணா போன்ற மற்றைய சீர்திருத்த நாடகக்காரர்கள் வழங்கிய நாடகங்களின் இன்னொரு சமூக அரசியல் விமர்சன முகமாக-அரசியல் அங்கத வெளிப்பாடாக-சோவின் நாடகங்கள் விளங்கின. டி.கே.எஸ்., சகஸ்ரநாமம் போன்றோரது நாடகங்களின் இன்னொரு புதிய முகமாக பாலச்சந்தர், கோமலின் நாடகங்கள் விளங்கின. பம்மலின் தொடர்ச்சியாக ஒய்.ஜி.பி.யும், நவாப் ராஜமாணிக்கத்தின் நாடக வாரிசாக ஆர்.எஸ்.மனோகரும் விளங்கினர்.

இவ்வகை மாற்றங்களைக் கவனத்தி லெடுத்து, தமிழ் நாடக வளர்ச்சியைக் கவனிக்கையில், 'நாடகம்' என்கிற வகைமைக்கு இவ்வகை மாற்றங்கள் எவ்வகையில் துணை செய்கின்றன என்பதைக் காணவேண்டுவது அவசியமாகிறது. 'நாடகம்' என்கிற அடிப்படையையே கேள்விக்குட் படுத்துகிறது இது. கதை, கவிதை, புதினம் போல் சொல்லாடல்கள் நிறைந்த வெறும் எழுத்துப்பிரதி மட்டுமேயில்லை நாடகம். முரண்களின் வளர்ச்சியைக் கூறும் சாகித்தியம், முரண்களை வடிவாக்கிக் காட்டும் நிகழ்த்தல் ஆகிய இரண்டு பக்கங்களையுடைய ஒரு கலைவடிவம் நாடகம். நிகழ்த்தல் அதன் தன்மையா யிருக்கையில் காலவெளியும், களவெளியும் இணைந்த நிகழ்த்தும் வெளி அதற்கு இன்றியமையாதது. களவெளியில் கோட்டுருக்களின் பல்வகைக் கூட்டுவினை ஓவியத்தை உருவாக்குகிறது; கோட்டு ருக்களின் பருமன் சிற்பத்தைத் தருகிறது. காலவெளியில் ஒலி இழைக் கோட்டுருக்களின் கூட்டுவினை இசையை உருவாக்குகின்றது. இவைகளின் இணைப்பில் நிகழ்த்தும் வெளியில் கருத்துப் புலப்படுத்தம் நிகழ்கையில் அது நாடகமாகிறது.

நாடகம் என்கிற நிகழ்வில் பிரிக்கவியலாத கூறுகளாக இருப்பவை

1. எழுத்துப்பிரதி அல்லது கரு (சிந்தனை), 2. நிகழ்த்தும்வெளி, 3. நிகழ்த்துநன் (நடிகன்), 4. பார்வையாளர்கள் ஆகிய நான்கு மட்டுந்தான். பிரதி என்பது நாடகம் என்பதாக அடையாளப்படுத்தும் இலக்கிய வகையைக் குறிக்கும். நிகழ்த்தும் வெளியின்றி நிகழ்த்தல் என்பது சாத்தியமேயில்லை. நிகழ்த்தும் வெளியில் நிகழ்த்துநன் என்கிற



படிப்பகம்

www.padippakam.com

கோட்டுருக்களின் அர்த்தமுள்ள இயைபு, பிரதியின் முரணைப் பார்வை வடிவில் புலப்படுத்தி நாடக அனுபவத்தைப் பார்வையாளருக்குத் தரும். நிகழ்த்தும் வெளியை அலங்கரித்தல், நிகழ்த்துநனை அலங்கரித்தல் போன்றவை இரண்டாம் நிலையின. நிகழ்த்துநனும், நிகழ்த்தும் வெளியும் மட்டுமே நிகழ்வில் முதன்மையானவர்கள்.

இந்த அடிப்படையில் நிகழ்த்துநன் நிகழ்த்தும் வெளியில் கொள்ளும் உறவின் வழி-புதுப்புதுக் கோட்டுருக்களை நிகழ்த்தும் வெளியில் உருவாக்கிப் புதியக் காட்சிப் படிம அனுபவங்களைத் தருவதன் வழி-நாடகக் கரு புதிய அனுபவத்துடன் பார்வை யாளரைச் சென்று சேர வேண்டியதிருக்கிறது. ஆனால் பொதுவாகத் தமிழ் நாடக வளர்ச்சியில் மாற்றங்களைத் தந்த பல்வகை நாடகக் குழுக்களும் இரண்டாம் நிலையிலான ஏதுக்களின் வழியே மாற்றங்களைத் தர முயற்சித்துள்ளன. முதல் நிலையான நிகழ்த்தும் வெளி, நிகழ்த்துநன் வெளி, நிகழ்த்துநன் உறவின் வழி புதிய மாற்றங்களை உருவாக்கித் தரக் காணோம். அரங்கமைப்பு, நிகழ்த்தும் வெளியில் நிகழ்த்துநன் கொள்ளும் பரிபூர்ண உறவின்வழி நாடக மையக் கருவிற்குக் கூடுதல் துணை செய்யக் கூடியதாக விளங்க வேண்டும்.

உயிரற்ற காட்சி ஜோடனைகள் உயிருள்ள நிகழ்த்துநனை விழுங்கிவிடக் கூடாது. உரையாடல்கள் காட்சிப் படிமத்தின் அர்த்தத்தை ஆழமாக்கிக் காட்ட உதவ வேண்டும். உரையாடல்கள் வெறும் பொழிவுகளாக நின்று ஊதை மட்டுமே ரசிக்கும் மனத்தை உருவாக்க முயலுகையில் நாடக வடிவில் அந்த மாற்றம் உயிருள்ளதாயிருக்க முடியாது. தமிழிசைப் பாடல்கள் சங்கரதாஸ் சுவாமிகள் நாடகம் வழி வளர்ந்தன என்பது உண்மையாயினும், அப்பாடல்கள் காட்சி வடிவாக நிகழ்த்துநன் மூலம் நிகழ்த்தும் வெளியில் எவ்விதம் உருப் பெற்றன என்பதைக் கவனித்தால் அவை நாடகமாக மாறியிருக்கவில்லை என்கிற உண்மை புரியும். ஒப்பனை, உடை, காட்சியமைப்பு, மின்கருவிகள், அனைத்தும் உயிருள்ள நிகழ்த்துநன், நிகழ்த்தும் வெளியில் கொள்ளும் பிரதிபூர்வ உறவுக்கு உதவும் துணைக்கரங்களே. அவற்றிலுள்ள வளர்ச்சி ஒரு பக்க வளர்ச்சிக்கே ஒப்பாகும்.

நாடகம் பற்றிய இவ்வடிப்படைக் கருத்தாக்கங்கள், இருந்து கொண்டிருக்கும் நாடகப் படிமத்தைக் கேள்விக்குட்படுத்துகின்றன. அதனாலேயே நாடக வகைமை உள்ளுக்குள் முரணத் தொடங்குகிறது. நாடகப் பிரதிகள், நிகழ்த்தல்கள் விமர்சனத்திற்குள்ளாகப்படுகின்றன. நாடகம் தன் அடிப்படையை உணர, தன் பூர்வீகத்தைத் தேடத் தொடங்குகிறது அல்லது நாடக ஆர்வலர்கள் தேடத் தொடங்குகின்றனர். அதற்கான சூழலுக்கான காற்று மெல்ல வீசத் தொடங்குகின்றது. இன்றைய தேவையின் அடிப்படையில் அதன் ஜீவிதத்தை எவ்விதம் அர்த்தமுள்ளதாக உறுதிப்படுத்திக் கொள்ள முடியும் என்று ஓயாத முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன. நாடகப் பிரதியின் பூர்வீகம் தோண்டி எடுக்கப்படுகிறது. நவீன நாடகப்பிரதி அதனின்றும் எவ்விதம் வேறுபடுகிறது என்பதை அறிவுபூர்வமாக உணர முயற்சிக்கின்றனர்.

முந்தைய நாடகப் பிரதிகளில் கடவுளர்கள் கதாநாயகர்களாகவிருந்தனர். அரசர்கள் கதாபாத்திரங் களாயிருந்தனர். மனிதர்களோ புறநிலையில் தாங்கள் பார்த்த எலும்பும், சதையுமான மனிதர்களாக மட்டுமேயிருந்தனர். இதற்கு எதிராக,கடவுளர்கள் மீதும், மதங்களின் மீதும், ஆட்சி அதிகாரங்களின் மீதும், சக மனிதர்கள் மீதும், தன்னின் மீதும் நம்பிக்கை இழந்திருக்கிற - சமூகத்தில் தனக்கான முகத்தை இழந்து தனக்கான குறியீட்டு அடையாளத்தைத் தேடும் முயற்சியில் தொய்ந்து போயிருக்கிற-அகமன உளைச்சல்களில் சிதைந்து, அனைத்தையும் சிதைத்துச் சிதைத்தே பார்த்துப் பழகியிருக்கிற-தங்கள் படைப்புகளின் மூலம் தங்கள் இருப்புகளை நியாயப்படுத்துகிற எழுத்துகள் நவீன மனநிலையின் வெளிப்பாடாய் எழுந்த நவீன எழுத்தாகும். இது, முதலாளித்துவத்தின் உச்சம் தந்திருக்கும் பரிசு. அதனாலேயே புற உலகமும், வாழ்க்கையும், உணர்வுபூர்வமான அறிவும் நம்பத்தக்கவையாக இல்லாது மாறிய நிலையில், கஞைன் தன் மனக்குகைக்குள்ளேயே அதிகம் பயணம் செய்கிறான்... இதற்கான வெளிப்பாடுகளாகப் படிமங்களும், குறியீடுகளும் அமைகின்றன. புற உலகம் சார்பான வடிவங்களையே கண்டு கண்டு அனுபவித்தவர்களுக்கு இவ் வடிவங்கள் தம் உண்மையை வெளிப்படுத்துவதில்லை. இவற்றைப் புரிந்துகொள்ள முயற்சி செய்யாமல், இவை கலைகளே அல்ல என்று பழிதூற்றவே செய்வர் (ஞானி, மார்க்சீயமும் தமிழ் இலக்கியமும், 1988;247)

சங்கரதாஸ் சுவாமிகள் நாடகப் பிரதிக்கு, நகர்ப்புறத்துப் படித்தவரான சம்பந்த முதலியாரின் பிரதி-பாடும் இசை நாடக மரபு உரை நடையாக மாறியது-ஓர் அளவுமாற்ற வளர்ச்சியைக் குறித்தது போல, நவாப் ராஜமாணிக்கத்தின் காட்சி ஜோடனைகள் இன்னொரு அளவு மாற்றத்திற்கு



படிப்பகம்

www.padippakam.com

இட்டுச் சென்றதுபோல்-தமிழகத்தில் அறுபது, எழுபதுகளில் நிகழ்ந்து வந்த பொதுவான நாடகப் பிரதிகளில் பாத்திர நடவடிக்கைகளை இனங்காட்டும் மனோவியல் மறைந்து, வார்த்தைகள் தங்கள் இறுக்கங்களைத் தளர்த்திக் கொண்டு காற்றினூடே கரைந்து போனபோது, மனோவியல் விகாரங்களை மையப்படுத்தி எழுந்த இ.பா.வின் நாடகங்கள் இன்னொரு அளவு மாற்றத்திற்குத் தமிழ் நாடகத்தைக் கொண்டு சென்றன. அந்த வகையில் இ.பா.வின் நாடகங்கள் தமிழில் குறிப்பிடப்பட வேண்டியவை. ஆர்தர்மில்லர், டென்னிசு வில்லியம்ஸ் ஆகியோரின் நாடக உத்வேகத்தில் உருவான இ.பா.வின் பெரும்பான்மை நாடகங்களில் 'தனிமை' விகசிக்கப்படுகிறது. நாடக இறுக்கம், நாடகக் கட்டமைப்பு, கதாபாத்திரங்களுக்கிடையிலான தர்க்கம், கதாபாத்திர வார்ப்பிற்குரிய மனோவியல் பின்னணி ஆகியவை இ.பா. நாடங்களில் முறையாகக் கைவரப் பெற்றிருந்தன. இந்த அளவுமாற்றமும் 80 களில் தான் கண்டுகொள்ளப்பட்டு நிகழ்த்தப்பட்டன.

சொல்லிலும், பொருளிலும், சுவையிலும் ஒருசேர மாற்றம் தரத்தக்க குணநிலை மாற்றமானது 1964-இல் ந. முத்துசாமி நடை இதழில் 'காலம் காலமாக' நாடகத்தை எழுதியபோது நிகழ்ந்தது என்று கூறலாம். நவகவிதை அங்கீகாரத்திற்கான இருத் தலுக்காக இவர் எதிர்கொண்ட பழமைக்கும் புதுமைக்குமான போராட்டம், படைப்பின் சுதந்திர வெளிப்பாட்டிற்கான தவிப்பு, தலைமுறை இடை வெளிச் சிக்கல் 'காலங்காலமாக' ஒரு தலை முறை எழுத்தாளர்கள் மாறுபடுகிறார்கள் என்றபோது முந்திய தலைமுறைக்காரர்களாகத் தங்களைப் பாவித்துக் கொண்டவர்கள் குற்றம் கண்டு கொண்டிருந்தார்கள். அதன் விளைவு காலம்காலமாக (ந.முத்துசாமி, சில வார்த்தைகள்-நாற்காலிக்காரர்; 1974, ப.108) இதைத் தொடர்ந்த அவரின் பல நாடகங்களிலும் கருத்தியல்கள் கதாபாத்திரங்களாகி, படிமங்கள் காட்சி சித்திரங்களாக உள்ளன. 'பல்வகை அனுபவங்களின் சாரமாகத் திகழ்ந்த ஓர் உண்மையை உக்கிரமான முறையில் செறிந்த நிலையில் வெளியிடுவதற்குப் படிமங்கள், குறியீடுகள் ஆகியவை சரியான வடிவங்களாயிருக் கின்றன... உக்கிரமான உண்மைகள், நமது காட்சிக்கும் வெளியீட்டுகள் படிமங்களையும், குறியீடுகளையுமே இயல்பாகத் தேடுகின்றன. இப்படிமங்கள் கலையின் அகவியல் விதிகளுக்கேற்பப் பெருக்கியோ, திரித்தோ, வேறுபடுத்தியோ இவன் வெளியிடும் கலை வடிவங்கள் இவன் பார்வையில் சரியான உண்மையை உள்ளடக்கியவையாகின்றன (ஞானி, பக் 246-247). தங்கள் அக மனத்திற்கேற்ற படைப்பின் வழியே இவர்கள் தமது சுதந்திரத்தை அனுபவிக்கிறார்கள். வாழ்வின் வெறுமையை இவர்கள் இவ்வாறுதான் சந்தித்து நிறைவுபடுத்திக் கொள்ள முயல்கின்றனர். (மேற்படி, 248).

ஆயினும், 1964 இல் எழுதப்பட்ட ந. முத்துசாமியின் 'காலம் காலமாக' நாடகப் பிரதி 'நிகழ்த்தும் வெளி'யைத் தேடி 1988 வரை சுமார் 21 ஆண்டுகள் காத்திருக்க வேண்டியதிருந்தது. அவரின் நாற்காலிக்காரர் 1978-இல் தமிழின் முதல் நாடகப் பயிற்சி முகாம் காந்திகிராமத்தில் நிகழும் வரைக்கும் பொறுத்திருக்க வேண்டியிருந்தது. இ.பா.வின் நாடகங்கள் 1980 க்குப் பின்தான் தமிழகத்தில் முகங்காட்ட முடிந்தன. புதிய நாடகப் பிரதி உருவான காலம், அந்நாடகம் நிகழ்த்தல் காலம் ஆகிய இரண்டிற்குமிடையிலான நீண்ட இடைவெளிக்குக் காரணம் அதற்குரிய நவீனச் சூழல் உருவாகாமைதான். நவீன சமூகச் சூழல் உருவானதற்கான சமூகத் தேவையின் அடிப்படையிலேயே நவீன நாடகங்களின் தேவையும் அமையும்.

நிகழ்த்தும் வெளியின் பூர்வீகம் தொடங்கி, நேற்று வரைக்குமான நிகழ்த்தும் வெளியின் செயல்பாடு, அதனோடு நிகழ்த்துநன் கொள்ளும் உறவு, இன்றைய நவீனத்திற்கு அது உதவும் முறை ஆகியவை பற்றிய அறிவுபூர்வ சிந்தனையும் எழுகின்றது. கையில் கிடைத்திருக்கும் தொன்மை வடிவத்தின் எச்சமான கூத்தைத் தேடிப் போக வேண்டிய அவசியம் நவீன நாடகக்காரர்களுக்கு அவசியமாகிப் போகிறது. கூத்தில் நிகழ்த்துநன் நிகழ்த்தும் வெளி முடிவற்றது; எல்லையற்றது எனும் உண்மை உணரப்படுகிறது. காட்சி ஜோடனைகள் இல்லை. ஒலி ஒளிக் கருவிகளின் ஆட்சிமை இல்லை. வெற்று வெளியுடன் நிகழ்த்துநன் ஏற்படுத்திக் கொள்ளும் பல்வகை விசித்திர லய உறவுகளின் வழி காட்சிப்படுத்தல்கள் புதிய உலகிற்குப் பார்வை யாளனை அழைத்துச் செல்லும் விந்தையைக் காணமுடிகிறது. நிகழ்வின் மூலாதார உயிர்ப் பகுதியான நிகழ்த்தும் வெளி, நிகழ்த்துநன் ஆசிய இரண்டின் உறவு நிலைகளின் வழி ஏற்படும் புதிய மாற்றமே நவீன மாற்றமாயிருக்க முடியும் என்கிற முடிவுக்கு வருகிறது. அந்த வகையில் வெகுஜன பத்திரிகைகளுக்கு எதிர் நிலையில் சிறு பத்திரிகைகள் தோன்றிய சமூகநியதியின் பாற்பட்டதே வெகுஜன ரசனைக்கு எதிர்நிலையான இன்றைய சிறு நாடக இயக்கங்களும் அவற்றின் அர்த்தமுள்ள தேடல்களும்! இச்சிறு நாடக இயக்கங்களின் அர்த்தமுள்ள



படிப்பகம்

www.padippakam.com

தேடல்களுக்கு அடிப்படையாய் அமைந்திருப்பது நாட்டுப்புறவியல் ஈடுபாடும். அதற்குக் காரண மாயமைந்த தேசிய இனம் பற்றிய சிந்தனைகளுமே ஆகும். நாட்டுப்புறவியல் ஈடுபாட்டின் நீட்சியாகவே, நவீன நாடக ஈடுபாடு தமிழகத்தில் உருப்பெறுகிறது என்பது முக்கியமானது. அதன் தொடர்ச்சியாகவே நாடகத்துறைகள் தமிழகப் பல்கலைக்கழகங்களில் தனித்த துறையாக உருவாகத் தொடங்குகின்றன.

நாட்டுப்புறவியல் துறை ஈடுபாடானது, தன் மொழிவாரி தேசிய இன அடையாளமையைப் பற்றிக் கவலை கொள்ள வைக்க, அதன் தொடர்பாகத் தங்கள் பாரம்பரியக் கலாச்சார அடையாளமைகளுக்கான தேடல் அவ் இனத்திடம் உருவானதென்பது தவிர்க்க முடியாததாகிறது. இவை உருவாக்கிய அர்த்தமுள்ள தேடல்கள் வடிவ ரீதியானது மட்டுமேயில்லை ; கருத்தியல் ரீதியானதும் செயல் ரீதியானதும் தான் ...... எண்பதுகளில் மட்டுமே ஒலிக்கத் தொடங்கிய இவ்வகைத் தேடலுக்கு அடிப்படையாயிருப்பது அக்காலத்திய சமூக அரசியல் நிர்ப்பந்தமாகும் ஏக தேசியத்திலுள்ள பல்வேறு மொழிவழி தேசிய இனங்கள் ஒவ்வொன்றும் தத்தமக்கேயான தனித்த சூழலின் விளைவாய்த் தமக்கேயான தனித்த பிரச்சனைகளைக் கொண்டிருக்கையில் அவை தீர்க்கப் பெறாத நிலையில், அங்கு தன்னுரிமைக் குரல்கள் எழும்பத் தொடங்குகின்றன. மொழி வாரி தேசிய இனங்களின் நலன்கள் புறக்கணிக்கப்படுவதான கருத்து உருவானதற்கான அரசியல் பின்னணியே கலை இலக்கியத்தில் - நாடகத்தில் - தன் தேசிய இனத்தை முன்னிறுத்தத் துடிக்கும் தேடலைப் படைப்பாளி களிடம் உருவாக்கி உள்ளது. இத் தேடல் கலகத் தன்மை கொண்டது. எண்பதுகளில் இந்திய தேசியம் எனும் கருத்துருவைச் சவாலுக்கழைத்து மொழிவாரி தேசிய இனங்களின் குரல்கள் வலிமைபெறும் அரசியல் மாற்றத்தை ஒட்டியே கலை இலக்கியங்களின் குரல்களும் அமைந்துள்ளன மென்மையாக அல்லது வன்மையாக !

1976 இன் அவசர நிலைப் பிரகடனமும் அதைத் தொடர்ந்து பெரும்பான்மை மக்கள் பிரதிநிதிகளைக் கொண்டிருந்த மாநிலக் கட்சி ஆட்சி செய்த தமிழக அரசு கலைக்கப்பட்டதும், இதுவே 1980ல் 1997 ல் தொடர்ந்தும் இன்னமும் பயங்காட்டிக் கொண்டிருப்பதும், பெருகிவரும் ஆங்கிலக் கல்விக் கூடங்களின் அபரிமித வளர்ச்சியும், தொடர்ந்து விரட்டிவரும் பிறமொழி ஆதிக்கப் பயமும், காவிரி நீர்ப் பிரச்சனையில் பொதுத் தீர்விற்கான தாமதமும், இந்தியாவிலுள்ள மொழிவாரி தேசியங்களின் வளர்ந்து வரும் பிரச்சனைகளும், ஈழத்தமிழ்த் தேசிய உணர்வின் எழுச்சியும் தமிழ்ச் சூழலில் தேசிய இன உணர்வின் புறக்காரணிகளாக இருந்திருக்க வேண்டும்.

தமிழகத்தைப் பொருத்தவரை, சென்னையை மையப்படுத்தியும், சனாதன நாடகக் கலாச்சாரத்தைத் தமிழகமெங்கும் விரிவுபடுத்தியும் வந்த பல்வேறு பயின்முறை நாடகக் குழுக்கள் எண்பதுகளில் தொலைக்காட்சி நிலையம் நோக்கிப் படையெடுக்கத் தொடங்கின. தமிழில் சிறு பத்திரிகை இயக்கத்துடன் தொடர்பு கொண்டிருந்த 'உள் வட்டம்', நாடக முயற்சிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டது. ஈடுபடுத்திக் கொள்ளும் தொடக்க நிலையிலேயே தமிழ் நாடகம் எனும் கருத்துருவுடன் தன்னை ஐக்கியப் படுத்திக் கொண்டு அதற்கான தேடலுடன் தமிழ் நாடக முயற்சிகளில் ஈடுபட்டது. மொழிவாரித் தேசியத் தன்னுரிமைக் குரலுக்கான அரசியலை வெளிப் படையாக வைக்காமல், அதை நாடகப் பிரதியாக் காமல், கலை வடிவில் தமிழின் அடையாளமாக்க முயற்சித்தது. இதற்கு மைய சங்கீத நாடகஅகாடமியின் இளம் இயக்குநர்களை ஊக்குவிக்கும் திட்டமும் பயன்பட்டது என்பதையும் கூறியே ஆக வேண்டும்.

அந்த வகையில் நாடக நிகழ்த்தல்கள் நாட்டுப்புறக் கலை வடிவங்களின் பல்வகை ஒயிலாக்கக் கூறுகளின் கோட்டுருக்களுக்குப் புதிய அர்த்தங்களைத் தந்து புதிய அனுபவங்களை உருவாக்கித் தரமுயன்றன. 1978 முதல் தமிழ்த் தியேட்டர் தமிழின் அரங்கக்கலை என்று தெருக்கூத்தை நிறுவுகிற முயற்சிகளிலும், அதன் அம்சங்களைக் கொண்டு நவீன நாடகங்களை உருவாக்குவதிலும் கூத்துப்பட்டறை ஈடுபட்டு வந்தது. நிஜநாடக இயக்கம் எந்தவொரு குறிப்பிட்ட நாட்டுப்புறக் கலைவடிவத்தையும் நிறுவுகிற முயற்சியில் ஈடுபடாதிருந்தும், பொதுவாக நாட்டுப்புற கலைக்கூறுகளின் கோட்டுருக்களைப் புதிய அரங்கமொழியில் நிகழ்த்திக் காட்ட முயன்றுவந்தது. பல்கலை அரங்கமானது தமிழின் அடையாளத்தை நாடகத்தில் நிறுவுவதையே தன் பிரகடனமாக்கிக் கொண்டுள்ளது. 'தன்னானே' தமிழ் அடையாளத்தை மட்டுமின்றி தலித்திய அடையாளத்தையும் காட்டுவதாய் உள்ளது. பல்வேறு குழுக்களின் நாடக முயற்சிகளில் இவ்வகைத் தாக்கங்களைக் காண முடிகிறது. நாட்டுப்புறக் கலைவடிவை அக்கலை ஞர்களைக் கொண்டு அப்படியே நவீனவகை நாடகத்தில் பயன்படுத்துகிற தன்மை ; நாட்டுப்புறக் கலைவடிவின் ஒயிலாக்கக் கூறுகளைப் புதிய



படிப்பகம்

www.padippakam.com

அர்த்தத்தில் நவீனவகை நாடகத்தில் பயன்படுத்தும் தன்மை ; நாட்டுப்புறக் கலை வடிவின் அடிப்படைச் சந்தத்தை மட்டும் எடுத்துக் கொண்டு அதை விரித்து அதன் போக்கில் புதிய வடிவாக்கிக் காட்டுகிற தன்மை என்கிற மூன்று நிலைகளிலும் தமிழில் நவீன நாடக முயற்சிகளில் நாட்டுப்புறக் கலைக் கூறுகள் பயன்பட்டிருக்கின்றன. புறஞ்சேரி, நந்தன் கதை, இருள்யுகம் போன்றவை முதல்வகையைச் சேரும். இரண்டாம் வகையில் துர்க்கிர அவலம், சாபம், விமோசனம் ? , ஸ்பார்டகஸ், புரட்சிக்கவி, சத்தியசோதனை, முற்றுகை, ஊசி, பலியாடுகள் ஆகியவை சேரும். மூன்றாம் வகையில் வெறியாட்டம், தீனிப்போர் ஆகியவை அடங்கும். பெண்ணிய நாடகம், தரீத் நாடகம், தளவாட அரங்க நாடகம், அரசியல் நாடகம் என்று பல்வேறு கருத்துருக்களைக் கொண்டிருந்த போதிலும் நாடக நிகழ்த்துதலில் அதன் ஒயிலாக்கத் தன்மையில் மேற்குறித்த தன்மைகளில் ஏதேனுமொன்றின் அடிப்படையில் பெரும்பாலும் நாடகங்கள் அமைந்திருந்தன.

ஆயினும் தற்பொழுது இன்னொரு புதிய நெருக்கடியை நவீனத் தமிழ் நாடகம் எதிர்கொள்ளத் தொடங்கியிருக்கிறது. தமிழின் அடையாளத்தைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டிருந்த சிரத்தையும் கேள்விக்குள்ளாயிருக்கிறது. மாநிலக் கட்சிகளின் மீது நம்பிக்கை இழப்பு, வாழ்வியலின் அனைத்து நிலைகளிலும் இழந்து போயிருக்கிற மதிப்புகளை வெறும் அடையாளங்களை நிறுவுவதன் மூலம் மீட்டெடுத்துவிட முடியுமென்ற கருத்துரு எதிர்கொள்ளும் புதிய எதிர்மறைச் சவால்கள், நாட்டுப்புறவியல் ஈடுபாடும் ஏகாதிபத்தியத்தின் கலாச்சார ஊடுருவலுக்கான இன்னொரு புதிய முகமா என்கிற பயம் உலகச் சந்தைக்கும் நம் வாழ்வின் தேசியப் படிமானச் சிதைவிற்கும் கதவைத் திறந்துவிடும் தாராளமய வாதம் உலகமய வாதம் பன்முகப் பண்பாட்டு தளங்களில் வெறும் அருங்காட்சியகப் பொருட்களாக்கி விடத் துடிக்கும் ஈழத்தமிழ் எழுச்சியின் பின்னடைவு, சாதிய மதவாதத்தை முன்னிறுத்தும் அமைப்புகளின் வலிமை ஆகிய இவை இன்று புதிய கேள்விகளாக நேற்றைய நிகழ்த்தல்களைக் கேள்விக்குட்படுத்துகின்றன. இதன் ஒரு குரல் வெங்கட் சாமிநாதன் மூலம் இப்படி வெளிப்படுகிறது என்று கொள்ளலாம். "சங்கீத நாடக அகாடெமிக்காரர்கள் எப்படிச் செய்வார்களோ எனக்குத் தெரியாது. ஆனால் உடனடியாக இந்த நாட்டுப்புறக்கலை, மரபுக்கலைப்பாணி நாடகங்களை வலியுறுத்தி வந்தது காலாவதியாகிவிட்டது என்பதைப் பிரகடனம் செய்ய வேண்டும். அப்போதுதான் நாட்டுப்புறக்கலை என்றும் பாரம்பரியம் என்றும் பாசாங்கு செய்கிற எல்லா வேலைப்பாடுகளும் ஒட்டுமொத்தமாகக் களைந்தெரியப்படும். இருள் அகலும் ஒளி வீசும் (வெங்கட் சாமிநாதன்; தென் மண்டல நாடக விழா விமர்சனம், வெளி - 17 ; 10) என்கிற கருத்தும் 'ஒரு நல்ல ரியலிஸ்டிக் நாடகம் போடப்படணும். அதில் தான் பார்வையாளர்கள் தங்களை இணைத்துக் கொள்வார்கள். சமகால விஷயங்களை நாடகத்தில் சித்தரிக்க வேண்டும். யதார்த்தமாக நடக்கும் அந்த நாடகங்களுக்குப் பார்வையாளர்கள் வருவார்கள். அவர்கள் ரசனை வளரும். நாடக இயக்கம் தமிழ்நாட்டில் வேர் விடும் (வெங்கட் சாமிநாதன், நவீன தமிழ் நாடகம் - மூலவர்களுடன் ஒரு விவாதம், வெளி - 17 ; 24) என்ற கருத்தும் வெளிவருவதற்கான சூழலைக் கடந்த 20 ஆண்டுகால நவீன நாடகத்தேடல் முயற்சிகள் அவருக்குத் தோற்றுவித்திருக்கின்றன என்கிற உண்மையின் பின்னணி நுணுகிக் கவனிக்கப்பட வேண்டியதிருக்கிறது.

சோவியத்தின் சிதைவு பொதுவுடைமைத் தத்துவம் எதிர்கொண்டிருக்கும் புதிய சிக்கல்கள் இந்திய - தமிழக அரசியல் கட்சிகளின் மோதல்கள், இழுபறிகள் மற்றும் சந்தர்ப்ப வாதங்கள், உட்ஜனநாயக மோதல்கள், இடது சாரி சக்திகளிடையே இணக்க மின்மை கூட்டாட்சி எனும் கூட்டுணர்வின் ஒத்திசைவில் உருவாகும் நம்பிக்கை ஐயங்கள் அனைத்து முயற்சியில் இணைந்து செயல்பட முடியாமல் தவித்தல், சிறுசிறு குழுவாதல், குழுக்களுக்குள் ஒற்றுமையின்மை, அந்நியச் சக்திகள் வாழ்வின் அனைத்து வாழ்நிலை களிலும் ஊடுருவல், மொழிவாரி தேசிய இனக் கருத்தமைவுடைய குழுக்களிடையே காணும் ஒற்றுமை யின்மை, அவர்களும் குறுங்குழுவாக மட்டுமே செயல்படும் தன்மை, நவீன மரபுகளை இன்றைய அதிகார அமைப்பு நிறுவனப்படுத்த முயலும் ஆயத்தங்கள், சாதீய மேலாதிக்க முயற்சிகள், மதவாதத்தை முன்னிறுத்தும் அமைப்புகளின் வலிமை, மேன்மேலும் பிரச்சனைகள் குழப்பமடைந்து சிக்கலாதல், இவைகளின் பாதிப்பால் ஏற்படும் அழகியல் கோட்பாட்டு மாற்றங்கள் புறக்காரணி களாயிருந்து இன்னொரு முயற்சியை இனங்காட்டக் கூடும். அப்பொழுது இப்பொழுதுள்ளதினின்றும் மாறுபட்ட ஒரு புதிய நாடகத்தை அது அடையாளங் காட்டும் என்று நம்பலாம். ♦



படிப்பகம்

www.padippakam.com

# அயர்லாந்து விடுதலைப் போராட்டம்

- எஸ்.வி. ராஜதுரை

இன்று உலகில் நடக்கும் தேசிய இனப்போராட்டங்களில் மிக நீண்ட வரலாறுடைய போராட்டம் அயர்லாந்து (ஐரீஷ்) மக்களின் விடுதலைப் போராட்டமாகும். ஏறத்தாழ 800 ஆண்டுகளுக்கு முன்பு இங்கிலாந்திலிருந்து வெட்டுக் கத்திகளையும் குத்தீட்டிகளையும் ஏந்தி படையெடுத்து வந்த ஆங்கிலேய நார்மன் ஆதிக்கச் சக்திகளால் அயர்லாந்து கைப்பற்றப்பட்ட நாள் முதல் நவீன ஆயுதங்களையும் நச்சு வாயுவையும் கொண்டு இன்றைய பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் ஐரீஷ் மக்களைப் பல்வேறு கொடுமைகளுக்குள்ளாக்கி வந்த மிக அண்மைக்காலம் வரை அம் மக்களின் விடுதலை வேட்கை தணிய வில்லை. ஆதிக்கச் சக்திகளின் மீதான வெறுப்புணர்வு குறையவில்லை. பகைவனை வெறுக்காமல் தாயகத்தை நேசிக்க முடியாது என்பதை மறவாதவர்கள் அவர்கள். 'பகைவன்' என்று அவர்கள் கருதுவது சாதாரண பிரிட்டிஷ் மக்களையல்ல; அவர்களது அரசாங்கம், அதனது பாதுகாப்பிலுள்ள பிரிட்டிஷ் ஐரீஷ் ஆளும் வர்க்கங்கள், அவர்களது படைகள் ஆகியனவற்றைத்தான். அந்தப் 'பகைவன்' மீது அவர்கள் கொண்டுள்ள வெறுப்புணர்வு வெளிப்பாடாக இருப்பது 1980களில் விடுதலைக் கவிஞர் பாட்ரிக் கால்வின் *(Patric Galvin)* எழுதிய கவிதை :

## அயர்லாந்து மண்ணில் உள்ள பிரிட்டிஷ் படைவீரனுக்கு ஒரு கடிதம்

மொழியாக்கம் : எஸ்.வி.ராஜதுரை, கீதா, "மண்ணும் சொல்லும் மூன்றாம் உலகம்" கவிதைகள், அன்னம் (பி) லிமிடெட், சிவகங்கை, 1991

படைவீரனே
இங்கு வரவேண்டும் என்று நீ யாரையும்
கேட்கவில்லை
அது எங்களுக்குத் தெரியும்.
நீ ஆணைகளுக்கு அடிபணிகிறாய்
அது தங்களுக்குத் தெரியும்.
உனக்கு ஒரு மனைவி
ஒரு காதலி
ஒரு தாய் உண்டு
அது எங்களுக்குத் தெரியும்.
ஆனால் படை வீரனே
எங்கு நீ நிற்கிறாயோ
அங்கே உனக்கு மரணம் நிச்சயம்
எங்கு நீ நடக்கிறாயோ
அங்கே ஏற்படும் உனக்கொரு எரிகின்ற காயம்
எங்கு நீ உறங்குகிறாயோ
அங்கு உனக்கு அமைதியே இல்லை
ரத்த வெள்ளத் தீய கனவினூடே
விம்மித் தணிகிறது பூமி

படை வீரனே
நீ மடிந்தால்
நாய்கள்தான் உன்னைப் புதைக்கும்
இந்த மண்ணிற்கு நீ வந்த போது
புரிந்து கொள்ள வந்ததாகக் கூறினாய் நீ.
படைவீரனே, உனது புரிதல் எங்களுக்குச்
சலிப்பூட்டியிருக்கிறது
ஐரீஷ் மண்ணில் உள்ள பிரிட்டிஷ் துருப்புகளும்
கதவுகளை நீங்கள் தட்டுவதும்
தலைகளில் இடிக்கும் துப்பாக்கிக்கட்டையும்
சிறைகளும் விஷவாயுவும்
இருண்ட மூலைகளில் எங்கள் மீது விழும் அடி
உதைகளும்
எங்களுக்குச் சலிப்பூட்டியிருக்கின்றன.

படைவீரனே
இந்த மண்ணிற்கு நீ வந்த போது
புரிந்துகொள்ள வந்ததாகக் கூறினாய்.
இதுதானா உன் புரிதல்?
நாங்கள் இங்கு கனவு காண்கிறோம்.
இந்த பூமி எங்கள் பூமி எனக்
கனவு காண்கிறோம்.
கத்தோலிக்கரும் புராடஸ்டண்டுகளும்
கடவுள் நம்பிக்கையுள்ளவரும் இல்லாதவரும்



படிப்பகம்

www.padippakam.com

ஒரு நாள் இங்கு கூடி
ஐரிஷ் ஆண்களாய் ஐரிஷ் பெண்களாய்
கனவு காண்பர்.

மரணமே இல்லாத
பசுமையானதொரு பூமியை
இறங்கி வரும் ஒரு நிசப்தத்தை
சமாதானம் என்றொரு நிசப்தத்தை
நாங்கள் கனவு காண்கிறோம்
இந்தக் கனவை நாங்கள் காண்பதற்கு
படை வீரனே
நீ வேண்டியதில்லை.

அதுதான் எங்களது புரிதல்.

வீட்டுக்குப் போ படை வீரனே
நீ இங்கிருப்பது
காற்றை நாசப்படுத்துகிறது
உனது புன்முறுவல்
எங்களை அலங்கோலப்படுத்துறது
வீட்டுக்குப் போ படை வீரனே
உன்னைப் பிணமாக நாங்கள்
உன் வீட்டுக்கு அனுப்புவதற்கு முன்.

இந்தக் கவிதைக்குக் காரணமாக உள்ள ஒரு நீண்ட வரலாற்றின் சுருக்கத்தை இனி காண்போம்.

பிரித்தானியா என்றழைக்கப்படும் பிரிட்டிஷ் தீவுகளுக்கு மேற்கே 50 மைல் தொலைவிலுள்ள ஒரு தீவுதான் அயர்லாந்து. அத்தீவு அல்ஸ்டர் *(Ulster)*, முன்ஸ்டர் *(Munster)* வெய்ன்ஸ்டர் *(Weinster)* கொன்னாக்ட் *(Connacht)* என்ற நான்கு பகுதிகளைக் கொண்டுள்ளது. இன்று அயர்லாந்து இரண்டு பகுதிகளாகப் பிரிவினை செய்யப்பட்டுள்ளது. அல்ஸ்டர் என்ற பகுதியைக் கொண்ட வட அயர்லாந்தும் மற்ற மூன்று பகுதிகளையும் கொண்ட தென் அயர்லாந்தும் தான் அவை. வட அயர்லாந்து பிரிட்டனின் ஆதிக்கத்தின் கீழுள்ள பகுதியாகவும் தென் அயர்லாந்துக் குடியரசு என்ற சுதந்திர நாடாகவும் அமைந்துள்ளன. குடியரசின் பரப்பளவு 26,600 சதுர அளவாகும். வட அயர்லாந்தின் பரப்பளவு 5462 சதுர மைல். இன்று நடக்கும் போராட்டத்தின் குவிமையமாக இருப்பது அல்ஸ்டர் ஆகும். அதாவது பிரிட்டனின் மாகாணங்களில் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ள வட அயர்லாந்து ஆகும்.

- தொடரும்.

## மின்வெட்டைக் கண்டித்து மயிலத்தில் த.இ.மு. ஆர்ப்பாட்டம்

தமிழக அரசின் அக்கறையற்றப் போக்கினாலும், மின்வாரிய நிர்வாகத்தின் திறமையின்மை காரணமாகவும் தமிழ்நாட்டில் மின்வெட்டு ஏற்பட்டுள்ளது. அறிவிக்கப்பட்டுள்ள மின்வெட்டைவிட அதிக நேரம் மின்சார வெட்டு நடைமுறையில் உள்ளது.

நெய்வேலியில் உற்பத்தியாகும் மின் சாரத்தை பிற மாநிலங்களுக்கு வழங்கிவிட்டு நமது மின் தேவைக்கு கையேந்த வேண்டியதில்லை.

அதிலும், மயிலத்தில் மின்சாரம் எப்போது வரும், எப்போது போகும் என்பதே தெரியாத நிலை. இதனால் அனைத்துத் தரப்பு மக்களும் கடும் பாதிப்புக்கு உள்ளாகி உள்ளனர்.

இதனைக் கண்டித்தும் நெய்வேலி மின்சாரத்தைத் தமிழகமே பெற வேண்டும் என வலியுறுத்தியும் தமிழக இளைஞர் முன்னணி சார்பில் 27.04.98 அன்று மயிலத்தில் கண்டன ஊர்வலம், ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மின்வாரிய அலுவலகம் முன் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தின் முடிவில் தோழர் ம. பாபு (இணைச் செயலர் த.இ.மு.) விளக்கவுரை ஆற்றினார். மற்றும் தோழர்கள் த. இராமலிங்கம், த. சக்திவேல், பூ. சந்திரபாபு, ச. மதியழகன், இரா. சேகர், க. சக்கரபாணி, மொ. பூபதி, ச. பழனி ஆகியோர் பேசினார்கள்.

## அரசு மருத்துவமனை சீர்கேட்டை கண்டித்து பேரணி ஆர்ப்பாட்டம்

திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவ மனையின் சீர்கேட்டை கண்டித்து தமிழக இளைஞர் முன்னணியின் பேரணி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது தோழர்கள். இராசா ஒன்றியச் செயலாளர் தலைமையில் பேரணி தொடங்கி மருத்துவமனை முன் முழக்கங்கள் எழுப்பி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. முடிவில் த.தே. பொ.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் தோழர் இரா. கோவிந்தசாமி, பொதுக்குழு உறுப்பினர் தோழர் ரெ.செ.பாலன் ஒன்றியச் செயலாளர் ஜோசப்- ஆகியோர் உரை நிகழ்த்தினர்.


படிப்பகம்

www.padippakam.com

# தஞ்சை மண்ணுக்கு வன்னியர் புறக்குடிகளா?

- கோ. ஜெயபாலன்

'தமிழர் கண்ணோட்டம்', நவம்பர் '97 இதழில் 'சோழ அரசின் போக்கும் வீழ்ச்சியும்பற்றிய ஒரு வரலாற்றில் கண்ணோட்டம்' என்ற கட்டுரை திரு.எ. சுப்பராயலு, கல்வெட்டியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம் அவர்களால் எழுதப்பட்டுள்ளது. அதில் அவர் புதிய ஆய்வு என்ற பெயரில் அடிப்படையற்ற பல கருத்துகளை கூறியுள்ளார். அவையனைத்தையும் அலசிப் பார்க்க நேரமில்லை. அவர் கூறியவற்றுள் ஒரு குறிப்பிட்ட பகுதி மட்டும் என்னை வெகுவாக பாதித்து உள்ளதால் அதுபற்றி மட்டும் கருத்து தெரிவித்து முடிக்க எண்ணுகிறேன்.

அவர் அக்கட்டுரையில் ஓரிடத்தில், "......பதினோராம் நூற்றாண்டு தொடங்கி கொஞ்சம் கொஞ்சமாக அந்தச் சமூகவுடைமை போய் தனியுடைமை மலர்கிறது. இதற்குக் காரணிகளாக சோழர் ஆட்சியில் ஏற்பட்ட சில அரசியல் நிகழ்ச்சிகளைச் சொல்லலாம். ஒரு முக்கிய காரணி சோழர் படையில் பெருக்கம். முதல் ராஜாராஜனின் கீழ் பெரிய படை ஏற்படும்போது சோழ நாட்டுக்கு புறத்தே இருந்து பலர் படைவீரர்களாகச் சேர்கிறார்கள். அவ்வகையில் சோழர் படையிலே தென்னார்க்காடு, வடார்க்காடு பகுதிகளிலிருந்து பள்ளிகள் அல்லது வன்னியர்கள் என்று சொல்லப்படும் கூட்டத்தினர் நிறையபேர் படையில் சேர்கிறார்கள். படை பல்கிப் பெருகிறது. பெரிய போர்கள் நடக்கின்றன. ........ இப்போர்களின் விளைவாக படை வீரர்களுக்கு குறிப்பாக படைத்தலைவர்களுக்கு மிகுதியாக சொத்து சேர்கிறது. வெளிநாடுகளிலிருந்து கைப்பற்றப் பட்ட சொத்துக்களை அரசன் தம் படைகளுக்கு பகிர்ந்து தருவது வழக்கம். இதனால் படைத்தலைவர்கள் பெரிய செல்வந்தர்களாகிறார்கள். அவர்கள் அச்செல்வத்தைக் கொண்டு நிலங்களை வாங்கினார்கள். இதுவரைக்கும் படைவீரர்களாகவே இருந்தவர்கள், போர்த்தொழிலையே முக்கியமாகக் கருதியவர்கள் புதிய நிலவுடைமை யாளர்களாக மாறுகிறார்கள். இதற்கு முன்னால் உடமை யாளர்களாக இருந்தவர்கள் வெள்ளாளர்கள். காலங்காலமாக வேளாண்மைத் தொழிலிலே இருந்து வந்தவர்கள் அவர்கள். ஆனால் பதினோராம் நூற்றாண்டு தொடங்கி புதிய நிலவுடைமையாளர்கள் தோன்றுகின்றனர். பள்ளிகள் நிலவுடைமையாளர்களாக மாறுகிறார்கள். கள்ளர், மறவர் முதலிய போர் மரபினரும் அவ்வாறே மாறுகிறார்கள். பத்தாம் நூற்றாண்டுவரை நாட்டார்கள் என்றால் பெரும்பாலும் அவர்கள் வெள்ளாளர்களாக இருந்தார்கள். இதற்குப் பின்னால் நாட்டார்கள் என்றால் வெள்ளாளர்களல்லாத பள்ளிகள், மறவர்கள், கள்ளர்கள், கைக்கோளர் முதலியோரும் இருப்பார்கள்" என்கிறார்.

பதினோராம் நூற்றாண்டுக்கு முன் சமூகவுடமை இருந்ததாக அவர் முதலில் குறிப்பிடுகிறார் அப்படியானால் அதற்கு முன் வெள்ளாளர்கள் மட்டும் எப்படி நிலவுடைமையாளர்களாக இருந்திருக்க முடியும்? சமூகவுடமை என்றால் 'வெள்ளாளர் உடமை' என்று எந்த அகராதியில் உள்ளது அய்யா? சிறுபான்மை சாதியினரே வெள்ளாளர்களே வேளாண்மைத் தொழில் செய்தால்தான் பிழைக்க முடியும் என்ற நிலைமை இருந்திருந்தால் தமிழ் நாட்டிலேயே தனிப்பெரும்பான்மை மிக்க தமிழ்ச் சாதியினராகிய பள்ளிகள் (வன்னியர்கள்) போர்த்தொழில் மட்டும் செய்து எப்படி பிழைத்திருக்க முடியும்? இவ்வளவு பெரும் 'கூட்டம்' அன்றாடம் வயிறு கழுவ அன்று நாள்தோறும் என்ன செய்தார்கள்? பதினோராம் நூற்றாண்டுவரை சமூகவுடைமை தான் என்றால் அதிலுள்ள நிலவுடைமையாளர்கள் அனைவரும் தமக்குள் சமமானவர்களாகவே இருந்தார்கள் என்பதுதான் பொருள். இப்படியிருக்க அதற்குமுன் வெள்ளாளர்கள் 'நாட்டார்களாக' இருந்து 'நாட்டாமை' செய்யும் நிலமை எப்படி ஏற்பட்டது?

இக்கேள்விகளுக்கு திரு. சுப்பராயலு நியாயமாக பதில்சொல்ல முன் வருவாரானால் அவர் பதினோராம் நூற்றாண்டுக்கு முன்பே தனியுடமை இருந்ததைக் கட்டாயம் ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும். அதுதான் உண்மையும் கூட.

புலவர் வெள்ளைக்குடி நாகனார், குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் ஆட்சியில் உழவுத்தொழில் இன்றி, வானமும் பொய்த்து உழவர்கள் தாழ்நிலை எய்தியதை சங்க காலத்திலேயே 'வரிகொடா இயக்கம்' நடத்தி மன்னன் முன் இந்நிலை உணர்த்திப் பாடியுள்ளது அப்போதே தனியுடமை துவங்கி நிலவியிருப்பதைக் காட்டுகிறது : (1).

அடுத்து, பராந்தகன் நெடுஞ்சடையன் என்கிற பாண்டிய மன்னன், களப்பிர மன்னர்கள் பிராமணர்களிடமிருந்து பறித்து கீழ்க்குடிகளுக்கு தந்த நிலங்களை மீண்டும் கொற்கைக் கிழான் நற்சிங்கன் என்கிற



படிப்பகம்

www.padippakam.com

பிராமணனுக்கு மீட்டுத்தந்ததாக வேள்விக்குடி செப்பேட்டில் புகழப்படுகிறான் (2). களப்பிரர் ஆட்சிக்காலம் கி.பி..3 - ம் நூற்றாண்டு முதல் கி.பி.6 - ம் நூற்றாண்டு வரையாகும். எனவே அவர்கள் பிற்கால சோழர்களுக்கு முந்தையவர்கள். ஆக 6 - ம் நூற்றாண்டு முன்பே தமிழ்நாட்டில் நிலத்தில் தனியுடமை இருந்திருக்கிறது என்ற ஒரு செய்தி தெளிவாவதோடு, சுப்பராயலு கூற்றுக்கு மாறாக 6 - ம் நூற்றாண்டு வாக்கிலேயே பள்ளிகள், முத்தரையர்கள், கோனார்கள் போன்ற ஜாதியினர்களும் அப்போதே நிலவுடை மையாளர்கள் ஆகியிருக்கிறார்கள் என்கிற செய்தியும் இச்செப்பேட்டால் தெளிவாகிறது.

மேலும் வெள்ளாளர்கள் சோழ மண்டலத்தில் தஞ்சை, தென்னார்க்காடு மாவட்டங்களில் மட்டுமே உள்ளவர். அவர்களின் கிளையினர் எனக் கூறப்படும் முதலியார்கள் வடார்க்காடு, செங்கல்பட்டு மாவட்டங்களிலும் திருச்சி மாவட்ட காவிரி பாசன பகுதிகளில் மட்டுமே உள்ளனர். சேலம், தர்மபுரி சங்க காலத்திலேயே அதியமானால் ஆளப்பட்ட பழம்பெரும் மண்ணாகும். அம்மண்ணில் அன்றும் வெள்ளாளர் இல்லாத நிலையில் பள்ளிகளே (வன்னியர்) அங்கு வாழ்ந்து நிலபுலங்களை ஆண்டு நிலவுடைமையாளர்களாக இருந்திருக்க முடியும். இந்த நிலையில் வெள்ளாளர் கொடுத்துதான் பள்ளிகள் நிலவுடமையாளர்கள் என்பது எப்படி சரியாகும்?

மேலும் வெள்ளாளர்களுக்குரிய 'வெள்ளாளர்' என்ற பெயர் 'நிலப்பிரபு' என்ற பொருளைத்தரத்தக்கதே ஒழிய நிலத்துடன் நேரடி தொடர்புடைய 'உழவன்' என்ற பொருளுடையதல்ல : காணக்கூடிய இன்றைய உலகில் ஒரு வெள்ளாளர் கூட வயலில் இறங்கி உழைப்பவனாக இல்லாததிலிருந்தும், சூரியனை முதுகில் சுமக்கும் விவசாயிக்குரிய தமிழனுக்குரிய அழகிய கருப்பு நிறமும், உறுதியான உடற்கட்டும் அவர்களுக்கு அன்னிய மாயிருப்பதும் மேற்காணும் பொருளை வழங்குகின்றன. உழவன் தோன்றிய பிறகுதான் 'நிலப்பிரபு' உண்டாகமுடியும். ஒரு பெரிய காட்டைத்திருத்தி நிலப்பிரபு 'உழுகுடிகள்' கையில் தந்து குத்தகை பெறமாட்டான். எனவே வெயிலில் உழைத்துக்கருத்த பள்ளிகள், பறையர், கள்ளர், பள்ளர் கையில் காடு நிலமான பிறகுதான் ஆட்சியாளர்களின் உதவியோடு வெளுத்த தோல் வெள்ளாளர்கள் என்ற நிலப்பிரபுக்கள் உருவாகியிருக்க முடியுமே ஒழிய பேரா.சுப்பராயலு சொல்வது போல வெள்ளாளர்களிடமிருந்து கீழ் ஜாதிகளுக்கல்ல.

அடுத்து சோழ நாட்டு எல்லையை 'சோழ மண்டல சதகம்' (3) இப்படி குறிப்பிடுகிறது.

'கடல் கிழக்கு தெற்கு கரைபுரள் வெள்ளாறு
குடதிசையில் கோட்டைக்கரையாம் -வடதிசையில்
ஏணாட்டு வெள்ளாறு இருபத்து நாற்காதம்
சோனாட்டுக்கு எல்லையெனச்சொல்'

அதாவது சோழ நாட்டில் கிழக்கு எல்லை கடல்; தெற்கு எல்லை புதுக்கோட்டை திருமயத்திற்கு தெற்காக ஓடும் வெள்ளாறு; மேற்கெல்லை குளித்தலைக்கு மேற்கே மாயனூரை ஒட்டிய கோட்டைக்கரை; வடக்கெல்லை தென்னார்க்காடு மாவட்டம் சேத்தியாதோப்பிற்கருகில் ஓடும் வெள்ளாறு என்பது அச்செய்யுளின் பொருள்.

சேத்தியாத்தோப்பு வரையிலான பகுதி, பாதி பழைய தென்னார்காடு மாவட்டமாகும். இவ்வாறு பள்ளிகள் நிறைந்து வாழும் தென்னாற்காடு மாவட்டத்தின் பாதிப்பகுதி ஏற்கனவே சோழ நாட்டிற்குள் வந்து விடுகிறபோது சோழப்பேரரசின் விரிவாக்கத்திற்குப் பிறகுதான் பள்ளிகள் (வன்னியர்) புதிதாக சோழ நாட்டிற்குப் புறத்தே இருந்து சோழர் படையில் புகுந்தார்கள் என்ற ஆய்வு முடிவு எப்படி ஏற்பட்டது? ஏனென்றால் ஏனாட்டு வெள்ளாறு (சேத்தியாத் சோப்பு வெள்ளாறு) முதல் பள்ளிகள் கொள்ளிடத்தையும் தாண்டி காவிரியின் வடகரை வரைக்கும் அடர்த்தியாகவும், கீழத்தஞ்சையில் காவிரியின் தென்கரையிலும் வெகுதொலைவு பரவியுள்ளனர். இந்திய பள்ளிகள் என்கிற வன்னியர்கள் பிற்கால சோழப் பேரரசு விரிவடைத்த பிறகுதான் தஞ்சைக்குள் புகுந்தனர் என்றால் அம்மண்ணின் தொல்குடிகளாக 'இதற்குமுன் உடைமையாளர்களாக இருந்தவர்கள் வெள்ளாளர்கள். என்று பேரா. சுப்பராயலு அவர்களால் குறிப்பிடப்படும் வெள்ளாளர்கள் என்ற சிறுபான்மை சமுதாயத்தால் எப்படி பேரரசு நிறுவி வடக்கில் ஆண்ட பல்லவர்களையும், தெற்கேயிருந்த பாண்டியரையும் வெல்ல முடிந்தது? வெள்ளாளர்கள் அவ்வளவு போர்க்குணம் மிக்க சாதியாக இருந்திருந்தால் அவர்களுக்கெல்லாம் 'படையாட்சி' என்ற பட்டப் பெயர் ஏற்பட்டிருக்க வேண்டும் ! காட்டுக் 'கூட்டம்' பள்ளிகளுக்கு இந்தப் பெயரைத் தட்டும் அதிர்ஷ்டம் அடித்தது எப்படி?

தஞ்சை மாவட்டம் திருவிடை மருதூர் வட்டத்தில் பிற்கால சோழர்களின் கல்வெட்டுகள் செறிந்த திருவிடை மருதூர், திருவிசலூர் கிராமங்களுக்கருகில் 'படைத் தலைவன்குடி' என்ற குக்கிராமம் உள்ளது. அதில் முழுக்க முழுக்க படையாட்சி சமுதாயத்தவர்களே வசிக்கின்றனர். மருந்துக்குக் கூட வெள்ளாளர் இல்லை. முன்பும் இருந்ததில்லை என்கின்றனர் அந்த ஊர்க்காரர்கள். சுப்பராயலு கண்ணுக்கு ஒரு 'கூட்ட'மாகத் தெரியும் பள்ளிகள்தான் சோழப் பேரரசின் படைத்தலைவர் களாகவும், போர் வீரர்களாகவும் இருந்தார்கள் என்பதற்கு இந்த ஊர் சான்று ஒன்றே போதும். அத்தோடு வெள்ளாளர் வாழும் எந்த ஊருக்கும் இப்படிப் பெயரில்லை.



படிப்பகம்

www.padippakam.com

விஜயாலய சோழன் முத்தரையரின் தங்கை நாடான 'செம்புல நாட்டை'ப் (4) பிடித்து தஞ்சாவூரைக் கைப்பற்றிய பிறகுதான் (ஏறத்தாழ கி.பி. 85) பிற்கால சோழப்பேரரசு தோன்றியது. (5). அதற்கு முன் அவனும் அவன் முன்னோர்களும் கும்பகோணத்தை ஒட்டி தென் மேற்கிலுள்ள பழையாறையில் குறுநில மன்னர்களாக முடங்கிக் கிடந்தனர். (6). பிற்கால சோழரின் காலப்பகுதியை நான்காகப் பிரித்து ஒவ்வொரு காலக்கட்டத்திலும் எந்தெந்த பகுதியிலிருந்து கோவில்களுக்கு நிலங்கள் மானியங்களாக தரப்பட்டன. எங்கிருந்து நிறையாகத் தரப்பட்டன என்ற புள்ளிவிவரத்தை சேகரித்து திரு. ஜேம்ஸ் ஹெல்ட்ஸ்மேன் (துயநேள ழுயடைணாயமே) என்ற அமெரிக்கா ஆராய்ச்சியாளர் அண்மையில் வெளிவந்து உள்ள (ழுகைவள டிக 'டிறநச) (அரசதிகாரக் கொடைகள்) என்ற ஆங்கிலப் (7) புத்தகத்தில் தந்துள்ளார். அவற்றை அவர் வரைபடங்களால் நன்கு விளக்கியுள்ளார் அவற்றில் முதல் காலக்கட்டத்தில் பழையாறையைச் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்துதான் அதிக நிலக்கொடைகள் தரப்பட்டுள்ளன. இவற்றை வைத்து அவரே, "சடங்குகள் மற்றும் பொருளாதார அடிப்படையில் பேரரசின் தலைநகர் எனக்கொண்டால் அப்படங்கள் காட்டுபவை பழை யாறையே உண்மையான தலைநகர், தஞ்சாவூர் அல்ல என்பதேயாகும் என்கிறார் "கி.பி.8ம் நூற்றாண்டு முடியத் தஞ்சை நகரில் எந்த ஒரு சோழ மன்னனும் வாழ்ந்ததாக இலக்கியக் குறிப்புகளோ, கல்வெட்டுச் சான்றுகளோ இதுவரை கிடைக்கவில்லை." என்கிறார் குடவாயில் பாலசுப்பிரமணியன் (8). தஞ்சையைக் கைப்பற்றிய பிறகும் பழையாறை நகரே தொடர்ந்து தலைநகராக நிலவியதால் தான் பல்லவன் அபராஜிதனுக்கு ஆதரவாக சென்ற விஜயாலயன் மகன் முதலாம் ஆதித்தன், கங்க மன்னன் முதலாம் பிருத்திவீபதி படைகளுக்கும் மற்றொரு பல்லவன் நிருபதுங்கனுக்க ஆதரவாக சென்ற இரண்டாம் வரகுணவர்மன் தலைமையில் சென்ற பாண்டியப் படைகளுக்கும் கி.பி. 871-ல் சோழர் வரலாற்றில் மிக முக்கியப் போரான 'திருப்புறம்பயப்' போர் குடந்தை அருகில் உள்ள திருப்புறம்பயத்தில் 'உதிரப்பட்டித்திடல்' என்ற இடத்தில் நடந்தது (9). பழையாறை இடைக் காலத்தில் மட்டுமல்ல சங்க காலத்திலும் சோழரின் முக்கிய இருப்பிடமாக இருந்துள்ளது என்பதற்கு ஆவூர்க் கோட்டையில் நுழைந்துகொண்ட சோழன் நெடுங்கிள்ளியை மற்றொரு சோழன் நலங்கிள்ளி முற்றுகையிட்டு போரிட்டதும், புலவர் கோவூர் கிழார் அவர்களுக்கு அறிவுரை கூறி போரை நிறுத்திய நிகழ்ச்சியும் ஒரு நல்ல சான்றாகும் (10). அந்த ஆவூர் பழையாறை அருகிலுள்ள ஆவூர் என்ற சிற்றூரே ! அதன் அருகிலுள்ள குடந்தையும் அப்போதே' ... வெண்வேற் கொற்றச் சோழர் குடந்தை வைத்த நாடு தரு நிதியினும் செறிய' என்று (11) பதிவாகியிருப்பதும் இதனை மேலும் உறுதிப்படுத்தும். இந்த பழையாறை, ஆவூர் சோழன் மாளிகை ஆகிய ஊர்களிலும் கும்பகோணத்திலும் பெரும்பான்மையாகவும் திருப் புறம்பயத்தில் கிட்டத்தட்ட முழுக்கவும். சுற்றியுள்ள கிராமங்களில் முழுக்க முழுக்கவும் வன்னியர்களே வசிக்கின்றனர்.


சான்றுகள் :

1. புறநானூறு - பாடல் 35.
2. பாண்டியர் செப்பேடுகள் பத்து, கேள்விக்குடி செப்பேட்டு வரிகள் 39-46
3. Bulletin Del' elole Francaire Dextreme Orient Iome - LXXVI-1987
4. Epigraphica India Vol.XII, PP 142.
5. (I) SII. VOL-III, No. 205 (2) Epigraphica India XVIII, No. 4.
6. தஞ்சாவூர், குடவாயில் பாலசுப்ரமணியம் - பக்.16
7. Gifts of power - James Heiltzman, Pgs. 137, 239,240.
8. தஞ்சாவூர், குடவாயில் பாலசுப்ரமணியம் - பக்.19
9. தென்னிந்திய வரலாறு - நீலகண்ட சாஸ்திரி. கே. ஏ. - பக்273.
10. மேற்கண்ட அதே நூல் - பக். 202
11. புறநானூறு - பாடல் 60.


அடுத்த இதழில் முடியும்

## முப்பெரும் விழா !

நாள் : 10.06.1998 புதன் மாலை 6.00 மணியிலிருந்து 8.30 வரை

இடம் : சீனிவாச சாஸ்திரி அரங்கம் (ரானடே நூலக மாடி) சென்னை, திருமயிலை (லஸ்).

(1) முகத்தில் முகப்போவியமாக வந்த " 50 சாதனையாளர்கள்" என்னும் நூல் வெளியிடுதல் - சேகர் பதிப்பகம்.

(2) 50 சாதனையாளர்களையும் பாராட்டிச் சிறப்பித்தல்

(3) 'முகம்' 16-ஆம் ஆண்டுவிழா ! - கருத்து உரைகள்.

விரிவான நிகழ்ச்சி நிரல் ' முகம் ' 01.06.98 இதழில் காண்க. அனைவரும் வருகை தந்து சிறப்பிக்கவும்.

'முகம்'
ஆசிரியர் குழுவினர், சென்னை - 78,
தொலைபேசி : 480 2684.



படிப்பகம்

www.padippakam.com

# துள்ளித் திரிந்த காலம்

தமிழ் திரைப்பட உலகம் வயசுக்கு வந்து கொண்டிருக்கிறது போலும். தொடர்ந்து ஆர்ப்பாட்டம் ஆடம்பரம் குதூகலம் போன்ற உள்ளீடற்ற புனைவுகளிலிருந்து விடுபட்டு சில கனமான செய்திகளைச் சொல்ல முன் வருகிறது. வரவேற்க வேண்டிய மாற்றமே.

"துள்ளித் திரிந்த காலம்" புதிய இயக்குநர் பாலசேகரனின் கைவண்ணத்தில் இன்றைய இளைஞர் சமுதாயத்தின், நடுத்தர வர்க்கப் பெற்றோரின் நிலைமைகளை, வேலையில்லாத் திண்டாட்டம் என்ற கொடூர அரக்கனின் பேரழிவுகளைச் சித்தரிக்க முயன்றுள்ளது. ஓரளவு வெற்றியும் பெறுகிறது. இயக்குனரின் அனுபவமின்மை காட்சிகளை ஒன்றோடொன்று ஒட்டச் செய்வதிலும், ஊகத்தினால் அறிய வைக்கும் உத்தி போல் தோன்றினாலும் சில இடங்களில் அதற்கான முழுமையில்லாமலும் இருக்கிறது. பல இடங்களில் படம் கத்தரிக்கப் பட்டுள்ளதோ என ஐயப்பட வைக்கிறது. நாடகம் போன்று காட்சிகள் தொடர்பின்றி மாறுகின்ற உணர்வு தோன்றுகிறது. வேலை கிடைக்காத இளைஞர்களை தண்டச்சோறு, பொறுப்பற்றவர்கள் என வழக்கம் போல் பெற்றோர்கள் பேசினாலும் அவர்கள் விரும்பி வேலையற்று இருக்கவில்லை. உண்மையில் வேலை வாய்ப்பு இல்லை. குடும்பத்தை, பெற்றோரை கவனிக்க, அன்பு செலுத்த, ஒரு முழம் பூ வாங்கிக் கொடுக்க ஏராளமான ஆசை இருந்த போதிலும் வகையற்ற அவர் தம் கையறு நிலையினையும் அழுத்தமாகவே சொல்கிறது.

ரகுவரனும், குஷ்புவும் இயல்பாக கதைப்படியேயும் தத்தம் நடிப்புத்திறனாலும் உயர்ந்து நிற்கின்றனர்.

'காதலிப்பவர்கள் சாகத்தெரிந்த அளவுக்கு வாழ முயற்சிப்பதில்லை' என்று பேசும். குஷ்புவின் சகோதர பாத்திரம் இறுதியில் தானும் அதே முடிவுக்குப் போவது முரணாகத் தோன்றினாலும் வாழ்க்கை யதார்த்தம் அதுதான். "எனக்கும் ஆசையிருக்கிறது" எனக்கும் அப்பா வேணும்" என்று பேசும் வசனங்கள் மிகவும் பொருள் பொதிந்தவை மட்டுமல்ல காட்சிக்குத் தேவையானதாக கச்சிதமாகப் பொருந்துகின்றன.

பல இடங்கள் உபதேசங்களாக மிகையாக இருந்தாலும் காட்சி அமைப்புகள் கச்சிதமாக இருப்பதால் மிகையாகப் படவில்லை. வேலை வாய்ப்பு அலுவலகக் காட்சிகள் அரங்கில் பெரும் வரவேற்பைப் பெறுகின்றன. ஆயினும் இதன் பின்னணியில் உள்ள தொடர் ஐம்பதாண்டு அரசுகளின் கையாலாகாத் தனத்தை தொடாமல் தப்பிப்பது கண்டிக்கத் தக்கது. இதுதான் பாலச்சந்தரின் முத்திரையோ? நடுத்தர வர்க்கத்திற்கு காதல் எல்லாம் தேவையற்றது 'என சித்ரா பாத்திரம் தேளாக சொற்களைக் கொட்டுகிறது. மனித இனத்தின் ஒரு உயர்ந்த பகுதியான "காதல்" பொருளியல் வாழ்வால் எப்படி அர்த்தமற்றுப் போகிறது என்பது பளீரென மின்வெட்டாய் தெறிக்கிறது.

பல புதிய முகங்கள், தொலைக்காட்சியில் வந்த விளம்பர நடிகர்களை வைத்தே படத்தை நிறைவாகத் தந்திருக்கும் பாலசேகர் தமிழ்த் திரையுலகத்திற்கு கிடைத்த புதிய வரவு. புகைப்பட ஒளிப்பதிவில் பல இடங்களில் குறிப்பிடும் வண்ணம் உள்ளது. பாடல்கள் நினைவில் நிற்கவில்லை. இடிக்கப்பட வேண்டியது குட்டிச் சுவரில்லை ஆளும் வர்க்கத்தினரின் தொடர்ந்த கொள்கைகளே ! ❉

- நெய்வேலி சுகுணா

### மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனை சீர்கேடுகளைக் கண்டித்து தமிழக இளைஞர் முன்னணி ஆர்ப்பாட்டம்

மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் லஞ்ச ஊழல், மருந்துகள் இன்மை, நோயாளிகளை அலட்சியப்படுத்துவது, உள் நோயாளிகளாக சேர்க்க வேண்டியவர்களைப் புற நோயாளிகளாகப் பார்த்து அனுப்புவது போன்ற சீர்கேடுகள் நடந்து வருகின்றன.

இச்சீர் கேடுகளைக் களைந்து, மருத்துவமனையைத் திறனாகவும் தூய்மையாகவும் செயல்படுத்தக் கோரி 27.04.98 அன்று, மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனை வாயிலில் தோழர் சுந்தரபாண்டி தலைமையில் தமிழக இளைஞர் முன்னணியினர் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

தோழர் சி. காமராசு (த.தே.பொ.க.கிளைச் செயலாளர்) தோழர் இராஜேந்திரன் (த.இ.மு. செயலாளர்) ஆகியோர் உள்ளிட்டு திரளான தோழர்கள் கலந்து கொண்டனர்.



படிப்பகம்

www.padippakam.com

# கொசோவோ விடுதலைப் போராட்டம்

- வடமலை

யூகோஸ்லேவியாவில் மீண்டும் ஒரு கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது. யூகோஸ்லேவியாவில் இருந்த குரேஷியா, போஸ்னியா, மாசிடோனியா ஆகியவை பிரிந்து சென்ற பின் மீதமிருந்த செர்பியா மட்டும் தற்போது யூகோஸ்லேவியா என்று அழைக்கப்படுகிறது.

இந்நாட்டின் தெற்குப் பகுதி மாகாணமான கொசோவோ *(Kosovo)* வில் விடுதலைப் போராட்டம் தீவிரப்பட்டுள்ளது. கடந்த மார்ச் 5 - ஆம் தேதி செர்பியக் காவல்துறையினர் நடத்திய கண்மூடித்தனமான தாக்குதலில் கொசோவோவில் 80 பேருக்கு மேல் கொல்லப்பட்டனர். 5000 பேர் வீடுகளை இழந்து அகதிகள் ஆயினர்.



யூகோஸ்லோவியாவிலிருந்து கொசோவோ தேசம் தான். முதலில் பிரிந்து போகும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஏனெனில் கடந்த நாற்பது ஆண்டுகளாக கொசோவோ மக்கள் செர்பிய மேலாதிக்கத்திற்கு எதிராகப் போராடி வருகின்றனர்.

கொசோவோவில் வாழும் 19 இலட்சம் மக்களில் *90%* பேர் அல்பேனிய இனத்தவர். இவர்களின் மதம் இஸ்லாம்.

1950ல் ஏற்பட்ட கொசோவோ மக்களின் விடுதலைக் கிளர்ச்சி டிட்டோ ஆட்சியால் நசுக்கப்பட்டது. ஆயினும் டிட்டோ கொசோவோவுக்கு விரிவான சுயாட்சியை வழங்கினார்.

இதனைப் பயன்படுத்தி அம்மக்கள் " கொசோவோ குடியரசு" அமைக்கப்பட்டதாக அறிவித்தனர். தனி நாடாளுமன்றம், தனி நிர்வாக அமைப்பு, தனியான வரிவிதிப்பு அமைப்பு ஆகியவை உருவாக்கப்பட்டன. இக்குடியரசின் குடியரசுத் தலைவராக இப்ராஹிம் ருகோவா என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

செர்பிய யூகோஸ்லேவ் நாடாளுமன்றத்திற்கு நடந்த தேர்தலில் கொசோவோ அல்பேனியர்கள் வாக்களிக்கவில்லை. அது தங்களுக்குத் தொடர்பில்லாத தேர்தல் என்றும் தாங்கள் தனி அரசு என்றும் கூறினர். ஆயினும் அந்த அரசை எந்த நாடும் அங்கீகரிக்கவில்லை.

டிட்டோவிற்குப் பிறகு ஆட்சிக்கு வந்த ஸ்லபோடன் மிலசிவிக் கொடுமையான செர்பிய இனவாதி ஆவார். இவர் கொசோவோவுக்கு வழங்கப்பட்ட சுயாட்சி உரிமையை 1989 ஆம் ஆண்டு ரத்து செய்தார்.

அது முதல் ஒருவகை இழுபறி நிலை உருவானது. கொசோவோ செர் பியாவின் பிரிக்க முடியாத பகுதி என அறிவித்த மிலசிவிச் செர்பியப் படையை அங்கு குவித்தார். தமது நிர்வாக இயந்திரத்தை அப்பகுதியில் உறுதிப்படுத்தினார். அல்பேனியர்களின் கொசோவோவில் உள்ள அரசுப் பதவிகள் அனைத்திலும் செர்பியர்களே நியமிக்கப்பட்டனர். கொசோவோ இளைஞர்களில் *70%* பேர் வேலை இல்லாதவர்கள் என்ற நிலை உருவானது.

இந்த நிலையில் கொசோவோ " ஜனாதிபதி" ருகோவாவின் மிதவாத அணுகுமுறை பயன் தராது என்று கண்டு கொண்ட கொசோவோ இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்திற்கு ஆயத்தமானார்கள். . "கொசோவோ விடுதலைப் படை" அமைக்கப்பட்டது.

இந்த விடுதலைப்படை முகாம்களைத் தாக்குவது என்ற பெயரால் தான், செர்பிய அரசு கொசோவோ மீது வான்வெளித் தாக்குதல் நடத்தியது. இத்தாக்குதலில் கொசோவோ விடுதலைப் படையின் தலைவர் ஆடம் ஜெசாரி *(Adam Jesari)*



படிப்பகம்

www.padippakam.com

கொல்லப்பட்டார்.

ஆயினும் விடுதலைப் போராட்டம் தொடரும் என அறிவித்து கொசோவோ விடுதலைப் படையினர் தமது போராட்டத்தைத் தீவிரப்படுத்தி யுள்ளனர். மார்ச் 5 - ஆம் தேதி நடந்த கொல்லப்பட்டவர்களின் இறுதி ஊர்வலம் பேரெழுச்சியாக இருந்தது.

இதுவரை நடந்த குரேஷியா 'போஸ்னியா போராட்டங்கள் பழைய யூகோஸ்லேவியாவின் எல்லைக்குள்ளேயே நடந்தன. ஆனால் கொசோ வோவில் நடந்துள்ள இனப்படுகொலை அண்டை நாடுகளான அல்பேனியா, கிரீஸ் போன்ற நாடுகளையும் இப்பிரச்சினையில் இழுத்து விடும் ஆபத்து உள்ளதாக மேற்குலகம் அஞ்சுகிறது. அல்பேனியர்கள் வாழும் மாசிடோனியாவும் இதில் செர்பியாவுக்கு எதிராக தலையிடும் வாய்ப்புண்டு.

எனவே, இத்தாக்குதலை கனடா, அமெரிக்கா போன்ற நாடுகள் கண்டித்துள்ளன. ஐக்கிய நாடுகள் அவையின் பொதுச் செயலாளர் கோபி அன்னான் இவ்வினப் படுகொலையைக் கண்டித்துள்ளார். ஆயினும் ரஷ்யா செர்பியர்கள் பக்கம் நிற்கிறது.

எனினும் விரைவில் கொசோவோ தனி நாடாக விடுதலை அடையும் ; அடைய வேண்டும். ⁂

## தாமரைச் செல்வி பதிப்பகத்தின் சிறந்த நூல்கள் :

1. பொலிவிய நாட்குறிப்பு - சேகுவேரா - ரூ. 60/-
   - தமிழாக்கம் : அமரந்த்தா
2. கடைசி உயிலும், கடைசி வாக்குமூலமும் - ரூ. 30/-
   (சேகுவேரா - அர்ஜண்டைனா; டால்டன் - எல்சல்வடார் ; ஆரியல் டோப்மேன் - சிலி; தமிழாக்கம் யமுனா இராஜேந்திரன்
3. நிழல்களின் உரையாடல்-மார்த்தா திராபா - ரூ. 50/-
   (அர்ஜண்டைன் நாவல்)-தமிழாக்கம் அமரந்த்தா.

### நுண்கலைகள்

1. அரசியல் சினிமா : 16 இயக்குநர்கள் - ரூ. 75/-
   - யமுனா ராஜேந்திரன் (பக்கம் 300)
2. ஆப்பிரிக்க சினிமா-யமுனா ராஜேந்திரன் - ரூ. 35/-
3. மக்களுக்கான சினிமா-தொகுப்பு - ரூ. 50/-
4. எரியும் வண்ணங்கள்-ஓவியர் புகழேந்தியின் ஓவியங்கள் - ரூ. 75/-

### கவிதைகள்

5. சனங்களின் கதை - த. பழமலய் - ரூ. 30/-
6. செல்வி-சிவரமணி கவிதைகள் - ரூ. 15/-
7. பட்டாம் பூச்சி விற்பவன்-முத்துக்குமார் - ரூ. 20/-
8. வெட்கத்தைக் கேட்டால் என்ன தருவாய் - ரூ. 20/-
   - சங்கர்
9. ஆறாவது பூதம்-ஆசு - ரூ. 20/-
10. எரிந்து கொண்டிருக்கும் நேரம்-சேரன் - ரூ. 10/-

### கதைகள்

11. தாவரங்களின் உரையாடல் -எஸ்.ராமகிருஷ்ணன் - ரூ. 35/-
12. உயிர் தண்ணீர்-கண்மணி குணசேகரன் - ரூ. 35/-
13. தெலுங்கானா சொல்லும் கதைகள் -தமிழாக்கம் சாந்தாதத் - ரூ. 45/-
14. காடன் மலை-மா. அரங்கநாதன் - ரூ. 20/-

### மெய்யியல்

15. இயங்கியல் பொருள் முதலியல் - பேரா. தங்கவேல்சாமி - ரூ. 10/-

### மருத்துவம்

16. ஹோமியோபதி ஆலோசனை - தமிழாக்கம் கோச்சடை - ரூ. 25/-

### படைப்புலகம்

17. ஜோர்ஜ் லூயி போர்ஹே - எஸ். ராமகிருஷ்ணன் - ரூ. 30,/-

தொடர்புக்கு :
தாமரைச் செல்வி பதிப்பகம்
31/48 இராணி அண்ணாநகர், கலைஞர் கருணாநிதி நகர், சென்னை - 600 078.



படிப்பகம்

www.padippakam.com

# கோவை மதக் கலவரம் பற்றி உண்மை அறியும் குழு அறிக்கை

பெரிதும் அமைதிப் பூங்காவாகத் திகழ்ந்த தமிழ்நாட்டில், கோவையில் நடைபெற்ற மதக் கலவரங்கள் பற்றி பல 'செய்திகள்' வந்து கொண்டிருக்கும் சூழலில் உண்மைகளைக் கண்டறிய 'சமூக ஒற்றுமைக்கான எழுத்தாளர்கள் மற்றும் சிந்தனையாளர்கள் குழு' கோவை சென்று ஆய்வு செய்தது.

இக்குழுவில் பேரா. அ. மார்க்ஸ், வழக்குரைஞர் ரஜினி, சமூக ஊழியர் பழனிச்சாமி, எழுத்தாளர் சுந்தர்காளி, தலைமை ஆசிரியை சகோதரி செல்வநாயகம், பி.யூ.சி.எல். கோபி, எழுத்தாளர் பாமரன், ஓவியர் மோகன், சமூக ஊழியர் பாண்டியன், பொறியாளர் மணிகண்டன், மொழி பெயர்ப்பாளர் வெ. கோவிந்தசாமி தாழ்த்தப்பட்டோர் - இசுலாமியர் கூட்டமைப்பு ராஜ்குமார், மார்ட்டின் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

ஏப்ரல் 4,5 ஆகிய இருநாட்கள் இக்குழு கலவரப்பகுதிகளைப் பார்வையிட்டு, பல தரப்பினரிடம் உரையாடியது. இக்குழுவினர் அளித்துள்ள அறிக்கையின் சுருக்கம் வருமாறு.

கோவை மதக் கலவரங்களுக்கு பத்தாண்டு காலப் பின்னணி உள்ளது.

இப்போது கோவையில் பிப்ரவரி 14ல் தொடர் குண்டு வெடிப்புகளுக்கு உடனடிக் காரணமாக இருப்பது சென்ற நவம்பர் 29-ல் ஆர்.எஸ்.எஸ். அமைப்புடன் சேர்ந்து கொண்டு காவல்துறையினர் இசுலாமியர் மீது நடத்திய துப்பாக்கிச் சூடு, சூறையாடல்கள்தான் என்றும், நவம்பர் தாக்குதலில் 19 இசுலாமிய இளைஞர்கள் கொல்லப்பட்டு, ரூ200 கோடி சொத்துக்கள் இழப்பு ஏற்பட்ட போது பெரிய கட்சிகளோ, பத்திரிகைகளோ இதுபற்றி கண்டிக்காமல் விட்டதும் இசுலாமிய இளைஞர்கள் மத்தியில் விரக்தியை ஏற்படுத்தியது என்றும் இக்குழு சுட்டிக்காட்டுகிறது.

கோவையில் சில பகுதிகளில் உள்ள நடைபாதைக் கடைகளில் காவல்துறையினர் தினசரி ரூ 25 முதல் ரூ 50 வரை 'மாமூல்' பெற்று வந்தனர். அல்-உம்மா, தமிழக முஸ்லீம் முன்னேற்றக் கழகம் ஆகியவை தலையிட்டு இதனை நிறுத்தியதுடன், தாங்களே ரூ 5 முதல் 10 வரை 'மாமூல்' வசூலித்ததும் இவ்வமைப்புகள் கட்டைப் பஞ்சாயத்தில் ஈடுபட்டதும் காவல்துறையினரின் 'வரும்படியைப்' பாதித்ததால் இவ்வமைப்புகள் மீது காவல் துறையினருக்கு ஆத்திரம் ஏற்பட்டது.

காவலர் செல்வராஜ் தாக்கப்பட்ட சம்பவத்தை சாக்காக வைத்து, காவல்துறை இசுலாமியர்களுக்கு எதிராக கண்மூடித்தனமான தாக்குதல் நடத்தியது. துப்பாக்கிச் சூட்டில் 19 பேர் பலியாயினர். இசுலாமியர்களின் சொத்துக்கள் சூறையாடப்பட்டன. இத்தாக்குதலில் காவல் துறையினரும், ஆர்.எஸ்.எஸ். அமைப்பும் இணைந்தே ஈடுபட்டுள்ளனர். இப்பிரச்சினையின் போது தாழ்த்தப்பட்ட அருந்ததியர் சமூகத்தினரும் இசுலாமியருக்கு எதிராக திருப்பி விடப்பட்டதையும் இக்குழு எடுத்துரைக்கிறது.

நவம்பர் சம்பவத்தில் தமிழக அரசு நடுநிலையோடு நடந்து கொள்ளவில்லை என்றும் பாதிக்கப்பட்ட இசுலாமியர்களுக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளத் தவறிவிட்டது என்றும் இக்குழு கருதுகிறது.

இதனால் ஏற்பட்ட விரக்தியின் விளைவே பிப்ரவரி 14 தொடர்குண்டு வெடிப்புகள் என்று இக்குழு நிர்ணயிக்கிறது.

குண்டு வெடிப்பை அடுத்து, பிப்ரவரி 15 அன்று திருமால் வீதியில் ஒரு வீட்டில் ஒளிந்திருந்த இசுலாமிய தீவிரவாதிகளைப் பிடிக்கச் சென்ற போது, அவர்கள் காவல்துறையினர் மீது குண்டு வீசியதாகவும், சமயோசிதமாக ஒரு ஆய்வாளர் கதவைச் சாத்தியதால் ஆறு தீவிரவாதிகள் இறந்ததாகவும் பரப்பப்பட்ட செய்தி பொய்யானது என்பதை ஆதாரத்துடன் இவ்வறிக்கை எடுத்துக் கூறுகிறது. அந்த அறை குண்டுகளுடன் 6 பேர் தங்கவே முடியாத சிறிய குளியல் அறை என்றும், கைக்குண்டு எறியப்பட்டதால் ஏற்பட்டிருக்க வேண்டிய சேதம் ஏதும் அங்கு ஏற்படவில்லை என்றும் எடுத்துக் கூறும் இவ்வறிக்கை, உண்மையில் காவல் துறை துப்பாக்கிச் சூட்டில்தான் இந்த ஆறுபேரும் கொல்லப்பட்டனர் என்று கூறுகிறது. வெடி மருந்து மூட்டை என்று தொலைக்காட்சியில் படம் காட்டப்பட்டது வெறும் மண் மூட்டை என்றும் இக்குழு குறிப்பிடுகிறது.

அல்-உம்மா, த.மு.மு.க. ஆகியவை நடத்திவரும் கட்டைப் பஞ்சாயத்துக்கள் இசுலாமியர் இடையேகூட எதிர்க்கப்படுவதையும் இக்குழு கூறுகிறது.

அதே நேரம் ஒட்டு மொத்தமாக இசுலாமிய சமூகத்தையே விரோதியாக பத்திரிகைகளும், தொடர்பு சாதனங்களும் சித்தரிப்பது அபாயகரமானது என இவ்வறிக்கை விளக்குகிறது.



படிப்பகம்

www.padippakam.com

காவல்துறை மட்டுமின்றி பல்வேறு துறைகளும் கூட இசுலாமியருக்கு எதிராக திரும்பி உள்ளதற்கு ஆதாரமாக, இசுலாமியர்களுக்கு சிகிச்சை அளிக்கக் கூட சில மருத்துவர்களும், மருத்துவமனைகளும் மறுப்பதை எடுத்துக் காட்டுகிறது.

*CB - CID* விசாரித்து குற்றமற்றவர் என்று விடுவிப்பவர்கள் மீது கூட உள்ளூர் காவல்துறை வழக்குப் போடுவதாக இக்குழு கூறுகிறது.

கோவையில் மார்வாடி குஜராத்தி சேட்டுகளுக்கும் ஆர்.எஸ்.எஸ். மற்றும் இந்து வெறி அமைப்புகளுக்கும் உள்ள நெருக்கமான தொடர்பையும், இசுலாமியர்களுடன் உள்ள தங்கள் வணிகப் போட்டியின் காரணமாகவே இந்து வகுப்புவாத அமைப்புகளுக்கு சேட்டுகள் நிதியுதவி அளிக்கின்றனர் என்பதையும் அறிக்கை எடுத்துக் கூறுகிறது. கோவையில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள காவல்துறையினருக்கு ராஜஸ்தானி சங்கம் தங்குமிடமும், உணவும் வழங்கியதை இவ்வறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

குண்டு வெடிப்பு முதலான வன்முறைச் சம்பவங்களைக் கண்டிக்கிற அதேவேளை இப் பிரச்சினையில் இசுலாமிய சமுதாயப் பெரியவர்களின் பொறுப்புகளையும் இவ்வறிக்கை சுட்டிக்காட்டுகிறது. தாழ்த்தப்பட்ட மக்கள் இசுலாமியருக்கு எதிராக உள்ளதைப் பற்றி இசுலாமிய சமூகத்தவர் சிந்திக்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கிறது.

இக்குழு பல கோரிக்கைகளை அரசுக்கு வைத்துள்ளது. அவற்றில் சில

1. குண்டு வெடிப்பு விசாரணையில் முனைப்பு காட்டுவதைப் போலவே நவம்பர் கலவரத்தில் ஈடுபட்டவர் மீது நடவடிக்கை மேற்கொள்வதிலும் தீவிரம் காட்ட வேண்டும்.
2. பிப்-15ல் திருமால் வீதியில் கொல்லப்பட்ட ஆறு இளைஞர்களின் உடலைத் தோண்டி எடுத்து மறு விசாரணை செய்ய வேண்டும்.
3. மத அடிப்படையில் வீடு காலி செய்யச் சொல்வது, வேலை மறுத்தல், மருத்துவம் மறுத்தல் ஆகியவற்றை தடுத்து நிறுத்த வேண்டும்.
4. மோதல் நடைபெறும் இடங்களில் உள்ள அரசு அலுவலகங்களில் இரு சமூகங்களும், சம எண்ணிக்கையில் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.
5. இசுலாமிய அமைப்புகள் தடை செய்யப்பட்டுள்ள போது, ஆர்.எஸ்.எஸ்., இந்து முன்னணி ஆகியவற்றுக்கு கூட்டம் நடத்த அனுமதி கூடாது. ✶

## திருக்காட்டுப் பள்ளி மருத்துவமனையை மேம்படுத்தக் கோரி தமிழக இளைஞர் முன்னணி ஆர்ப்பாட்டம்

திருக்காட்டுப் பள்ளி அரசு மருத்துவமனை நோயுற்று முடங்கிப் போயுள்ளது. போதிய மருந்துகள் இருப்பில் இல்லை. எக்ஸ்ரே, ஸ்கேன் போன்ற வசதிகள் கிடையாது. அன்று கண்ட மேனியும் அழிந்து கொண்டு வருகிறது. இதில் லஞ்சம் வேறு.

திருக்காட்டுப்பள்ளி மருத்துவமனையில் வசதிகளை மேம்படுத்தக் கோரி 27.04.98 தோழர் வினோபா (த.இ.மு - திருவையாறு ஒன்றியத் தலைவர்) தலைமையில் தமிழக இளைஞர் முன்னணியினர் தொடர்முழக்க ஆர்ப்பாட்டம் நடத்தினர். மருத்துவமனை வாயிலில் நடந்த இப்போராட்டத்தை வாழ்த்தி தோழர் சி. அன்பழகன் (த.தே.பொ.க. ஒன்றியச் செயலாளர்) நா.வைகறை (பொதுச்செயலாளர் -த.இ.மு) பி. புதியவன் (ஒன்றியச்செயலாளர் - த.இ.மு.) ம. சந்தோஷம் (த.தே.பொ.க) ஆகியோர் பேசினர்.

## ஆதி திராவிடர் நலத் துறை கல்வி உதவித் தொகை தாமதம் மாணவர் முன்னணி கண்டன ஆர்ப்பாட்டம்.

தஞ்சை சாமியப்பா கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையத்தில் பயிலும் மாணவர்களுள் 33 பேருக்கு இக்கல்வியாண்டில் கிடைக்க வேண்டிய ஆதிதிராவிடர் நலத்துறையின் கல்வி உதவித்தொகை கிடைக்கவில்லை. கல்வித் தொகை வழங்க அனுமதி வழங்கப்பட்டும் கல்வியாண்டு முடியும் தருவாயிலும் கூட கல்வித் தொகை வழங்கப்படவில்லை.

முதல்வரிடம் கேட்ட போது ஜூன் மாதத்திற்கு மேல் வரும் என்று கூறிவிட்டார். முதல்வர் பெரும்பாலும் பயிற்சி நிலையத்தில் இருப்பதில்லை. எல்லாம் துணை முதல்வர்தான் !

தமிழக மாணவர் முன்னணியைச் சேர்ந்த மாணவர்கள் தோழர் பழ. ஸ்டாலின் (தமிழக அமைப்புக் குழு உறுப்பினர்) தலைமையில் தஞ்சை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ஆர்ப்பாட்டத்தை வாழ்த்தி தோழர்கள் நா. வைகறை (த.இ.மு) ம. செந்தமிழன் (த.மா.மு) ஆகியோர் பேசினர்.

இறுதியில், மாவட்ட வருவாய் அலுவலர் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடந்தது. துணை முதல்வர் இதில் கலந்து கொண்டார். மே 10ஆம் தேதிக்குள் 33 மாணவர்களுக்கும் கல்வி உதவித் தொகை வழங்கப்படும் என்று மாவட்ட வருவாய் அலுவலர் அறிவித்தார்.



படிப்பகம்

www.padippakam.com

# தி.மு.க. – அ.தி.மு.க. வின் கும்பல் பண்பாடும் – விதி 356 ம்

- பெ.மணியரசன்

பொழுது விடிந்து பொழுது போவதற்குள் ஜெயலலிதாவின் புலம்பல் ஒலி நாள்தோறும் காதைத் துளைக்கிறது.

“தி.மு.க. அரசைக் கலை” என்பதே அம்மையாரின் அன்றாட ஓலம். அரசமைப்புச்சட்ட விதி 356 மாநில ஆட்சிகளைக் கலைக்கும் அதிகாரத்தை தில்லிப் பேரரசுக்கு வழங்குகிறது. இந்த அதிகாரம், எதேச்சாதிகாரத் தன்மை கொண்டது ; தேசிய இனங்களின் தாயகமாக விளங்கும் மாநிலங்களை தில்லிக்குப் பாளையப் பட்டுகளாக மாற்றி விடுகிறது என்பது நமது கருத்து. இந்த விதி 356 ஐ அரசமைப்புச் சட்டத்திலிருந்தே நீக்க வேண்டும் என்பது நமது நிலை.



ஆனால் தமிழ்நாட்டில் “356 ஐப் பயன்படுத்து” என்ற குரல் அடிக்கடி ஒலிக்கிறது. ஒரு காலத்தில் தனி திராவிட நாடு கேட்ட தி.மு.க. மற்றும் அதிலிருந்து பிரிந்த அ.தி.மு.க. ஆகிய இருகட்சிகளும் எதிர்க்கட்சியாக இருக்கும் போதெல்லாம் ஏதோ ஒருவகையில் இக்கோரிக்கையை எழுப்பி வருகின்றன.

இரு கழகங்களும் அண்ணாவைத் தங்கள் தலைவராக ஏற்றுக் கொண்டுள்ளன. அண்ணா திராவிட நாட்டுப் பிரிவினையைக் கைவிட்ட போதும் அதற்கான காரணங்கள் இருந்துகொண்டு தானிருக்கின்றன என்று முதலமைச்சர் ஆன பிறகும் கூறி வந்தார். மாநில சுயாட்சி பற்றிக் கருத்துகள் கூறினார்.

அடுத்து இரு கழகங்களும் தந்தை பெரியார் வழி வந்தவையாகக் கூறிக் கொள்கின்றன. பெரியார் தம் வாழ்நாள் முழுதும் “தமிழ்நாடு தமிழர்க்கே” என்ற முழக்கத்தை எழுப்பி வந்தார்.

அண்ணா, பெரியார் வழி வந்ததாகச் சொல்லி கொள்ளும் கட்சிகள் - தங்கள் பகைமையில் பழி தீர்த்துக்கொள்ள, தில்லிக்குக் காட்டிக் கொடுக்கும் வேலையைச் செய்து வருகின்றன.

தி.மு.க. வில் ஏற்பட்ட பிளவு, கொள்கை அடிப்படையில் ஏற்பட்டதல்ல ; கருணாநிதிக்கும் எம்.ஜி.ஆருக்கும் ஏற்பட்ட தனிநபர் முரண்பாடுகள் அடிப்படையில் ஏற்பட்ட பிளவாகும்.

அதனால் தான் எம்.ஜி.ஆர். தனி கட்சி தொடங்கியதும் அன்று ஆட்சியிலிருந்த கருணாநிதி எம்.ஜி.ஆருக்கெதிராக அடக்குமுறைகளை ஏவி விட்டார். எம்.ஜி.ஆர் நடித்து வெளிவந்த ‘நேற்று - இன்று - நாளை’ என்ற திரைப்படம் காட்டப்படும் திரையரங்குகள் முன்பாக மறியல் செய்யுமாறு தம் தொண்டர்களை ஏவினார். எம்.ஜி.ஆர். மலையாளி அவர் தமிழர்களுக்கு தலைவரா என்ற புது முழக்கத்தைக் கிளப்பி பிரச்சினைகளை உண்டாக்கினார்.

கருணாநிதி ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்று கோரி ஊழல் பட்டியல் கொடுத்தார், எம்.ஜி.ஆர். 1976 ஜனவரி 31ல் கருணாநிதி ஆட்சியும் கலைக்கப் பட்டது. ஜனநாயக வாதிகள் எதிர்த்த எதேச்சாதிகார நெருக்கடி நிலைப் பிரகடனத்தை ஆதரித்து இந்திரா காங்கிரசுடன் கூட்டுச் சேர்ந்தார் எம்.ஜி.ஆர். இங்கு கொள்கை அல்ல பிரச்சினை; கருணாநிதியை வீழ்த்த வேண்டும் என்பது மட்டுமே நோக்கம்.

அரசியல் சூழல் மாறி இந்திரா காந்தியுடன் 1980ல் கருணாநிதி கூட்டுச் சேர்ந்து மக்களவைத் தேர்தலில் போட்டியிட்டார். இக்கூட்டணி வெற்றி பெற்று எம்.ஜி.ஆர். கட்சி தோல்வியுற்றது.

உடனே கருணாநிதி தமிழகத்தில் அன்றிருந்த எம்.ஜி.ஆர். ஆட்சியைக் கலைக்கக் கோரி





படிப்பகம்

www.padippakam.com

தில்லிக்குத் தூது போனார். இந்திரா காந்தியும் எம்.ஜி.ஆர். ஆட்சியைக் கலைத்தார்.

பின்னர் கருணாநிதி 1989ல் ஆட்சிக்கு வந்தார். ஜெயலலிதா தி.மு.க. ஆட்சியைக் கலைக்கச் சொன்னார். தில்லி அரசு கலைத்தது. 1991ல் ஜெயலலிதா தமிழக ஆட்சியைக் கைப்பற்றினார்.

ஜெயலலிதா ஆட்சியைக் கலைக்கும் படியான கோரிக்கைகளை சுற்றி வளைத்து எழுப்பினார் கருணாநிதி. "கலைக்கும்படி கோரவில்லை; கலைத்தால் மகிழ்ச்சியடைவோம்" என்றார் அவர்.

இப்பொழுது கருணாநிதி ஆட்சி நடத்துகிறார். ஜெயலலிதா இவ்வாட்சியைக் கலைக்கச் சொல்லி நாள்தோறும் அறிக்கை வெளியிட்டு நச்சரிக்கிறார் வாஜ்பாயியை ! தமிழகத்தை ஆளும் ஆட்சியின் மீது ஆயிரம் குற்றம் குறைகள் இருந்தாலும் யார் ஆட்சி செய்தாலும் அவ்வாட்சியைக் கலைக்கும் அதிகாரம் தில்லியிடம் இருக்கக் கூடாது என்கின்றோம் நாம். காரணம், இது ஆளுங் கட்சிப் பிரச்சினையல்ல, ஒரு தேசிய இனத்தின் உரிமைப்பிரச்சினை. தமிழக ஆட்சியானது கலைக்கும் நிலையில் வைக்கப்பட்டால் தமிழ் இனம் தில்லி அரசிடம் கொத்தடிமையாக இருக்கிறது என்று பொருளாகும்.

"மாநில சுயாட்சி" பற்றி அவ்வப்போது பேசுகின்ற இவ்விரு கழகங்களும் மாநில ஆட்சியை கலைப்பதற்கு வெவ்வேறு சந்தர்ப்பங்களில் குரல் எழுப்புகின்றன.

இரண்டு கட்சித் தலைவர்களும் பொது நிகழ்ச்சிகளிலும் ஒன்றாகக் கலந்து கொள்வதில்லை. தனிப்பட்ட பகைவர்களாகவே காட்டிக் கொள்கிறார்கள்.

இரு கழகங்களின் அணிகளும் தலைவர்களின் தனிப்பட்ட பகைமையைக் கொள்கைப் பகைமை போல் எடுத்துக் கொண்டு அதையே தமிழகத்தின் மைய அரசியலாக்கி கொண்டுள்ளன.

எம்.ஜி.ஆர். நோய்வாய்ப்பட்டு இறந்தவுடன் அ.தி.மு.க. தொண்டர்கள் காரணமில்லாமல் கருணாநிதி சிலையை உடைத்தார்கள.

கருணாநிதி கிழக்கே என்றால் ஜெயலலிதா மேற்கே என்பார். இவர்கள் இருவரும் எப்போதும் ஏட்டிக்குப் போட்டியாக எதிர்த்துப் பேசிக் கொண்டே இருப்பார்கள். இவர்கள் இருவரும் தங்கள் தங்கள் கட்சிக்காரர்களையும் அவ்வாறு தயார்படுத்தி வைத்துள்ளார்கள்.

தி.க விலிருந்து தி.மு.க பிரிந்தது. தலைவர் நாற்காலி பெரியாருக்காக காலியாக இருக்கிறது. என்று கூறி பெரியார் மீது தமக்குள்ள மரியாதையை அண்ணா வெளிப்படுத்தினார். அதே போல் 1967-ல் ஆட்சிக்கு வந்ததும் இவ்வாட்சி பெரியாருக்குக் காணிக்கை என்றார் அண்ணா. பெரியாரும் தி.மு.க. வை ஆதரித்தார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி 1964-ல் பிரிந்தது. ஆனால், காங்கிரசை எதிர்ப்பதற்காக, 1967-ல் இக்கட்சிகள் கூட்டணி கண்டு, கேரளத்திலும் மே வங்கத்திலும் ஆட்சியைப் பிடித்தன. இன்னும் கூட்டு நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன. தனி நபர் பகை முகாம்களாக இக்கட்சிகள் செயல்பட வில்லை.

தி.மு.க. வும் அ.தி.மு.கவும் சுயநலத் தலைவர்களால் தனிநபர் பகை முகாம்களாக மாற்றப்பட்டுவிட்டன. தி.மு.க. வும் அ.தி.மு.க.வும் அரசியல் பண்பாட்டை வளர்த்துக் கொள்ளவில்லை. கும்பல் பண்பாட்டைத்தான் வளர்த்துள்ளன. அதனால்தான் விதி 356 ஐப் பயன்படுத்தச் சொல்லி அக்கட்சிகள் அவ்வப்போது கூறி வருகின்றன.

**தமிழ் இனத்தின் மானக்கேடு ஜெயலலிதா !**

**தமிழ் இனத்தின் சாபக்கேடு கருணாநிதி!**

தி.மு.க. வும் அ.தி.மு.க. வும் அரசியலில் குடும்பப் பாசத்தைக் கொண்டு வந்து சாதனை புரிந்துள்ளதாகப் பேசிக் கொள்கின்றன.

தலைவர் மற்றும் தலைவரின் சொந்தக் குடும்பங்களாக இக்கழகங்கள் மாற்றப்பட்டு விட்டன என்பது தான் உண்மை. தலைவர் - தலைவியின் பகை - குடும்பப் பகையாக மாற்றப்பட்டு விட்டது.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களில் ஒருவரான லியோ- ஷோச்சி, "நல்ல கம்யூனிஸ்ட்டாக இருப்பது எப்படி?" என்று நூல் எழுதினார். அதில் "ஓர் அரசியல் கட்சி என்பது ஒரு குடும்பம் அல்ல; நண்பர்கள் கழகம் அல்ல; கொள்கை வழிப்பட்ட போராடும் இயக்கம்; கட்சிக்குள் தோழமை உறவே மேலானது. தோழமை உறவுதான் ஒரு வரை ஒருவர் விமர்சனம் செய்து தவறுகளைத் திருத்த வாய்ப்பளிக்கும்" என்றார்.

குடும்ப பாசம் அரசியலில் புகுத்தப்பட்ட ஒரே இயக்கம் தி.மு.க. என்றும் அ.தி.மு.க. என்றும் இவற்றின் தலைவர்கள் கூறிக் கொள்கிறார்கள். ஆனால் இவர்கள் வளர்த்தது, கும்பல் பண்பாடே !

பொது லட்சியத்தில் அமைந்த பொதுக் கொள்கை இருக்காது. ஆனால் சுயநல அடிப்படையில் பொது நோக்கம் இருக்கும். சுயக்கட்டுப்பாடு இருக்காது. ஆனால் அவ்வப்போது சுயநலத்திற்காக திரண்டு செயல்படுவார்கள். இதனைக் கும்பல் பண்பாடு எனலாம்.

தி.மு.க. வும் அ.தி.மு.க. வும் வளர்த்திருப்பது கும்பல் பண்பாடே தவிர, அரசியல் பண்பாடு அல்ல, குடும்பப் பாசமும் அல்ல.



படிப்பகம்

www.padippakam.com



# சிகாகோ தியாகிகளின் மவுனம்



நூறு ஆண்டுகளுக்கும் மேலாக மே நாள் கடைப் பிடிக்கப்பட்டு வருகிறது.

மே நாள் கோரிக்கையின் சாரம் ஒரு நாளைக்கு 8 மணி நேர வேலை என்று வரையறுக்க வேண்டும் என்பது தான்.

இக் கோரிக்கைக்காக ஆர்ப்பாட்டம் அணி வகுப்பு, வேலை நிறுத்தம் போன்ற போராட்டங் களைச் செய்ய மே முதல் நாளை தொழிலாளர்கள் தேர்வு செய்தனர்.

பழைய ரோமாபுரிப் பேரரசு காலத்தில் மே முதல் நாள் வசந்தகாலத் திருவிழா நாளாகக் கொண்டாடப் பட்டிருக்கிறது. ஃபுளோரா என்ற பெண் தெய்வத்தை வழிபடுவதற்கான வசந்த காலத் திருவிழா பழைய ரோமப் பேரரசில் ஏப்ரல் 28 தொடங்கி சில நாட்கள் வரை நடந்திருக்கிறது. பின்னர் மே முதல் நாளை வசந்தத் திருவிழாவாகப் பல ஐரோப்பிய நாடுகளில் கொண்டாடி இருக்கிறார்கள்.

'பாட்டாளி' *(Proletariat)* என்ற சொல் கூட பழைய ரோமப் பேரரசில் சுதந்திரக் குடிமக்களில் மிகவும் ஏழையாய் இருந்தவர்களைக் குறிக்கப் பயன் படுத்தப்பட்ட சொல் என்பர் ஆய்வாளர்கள். அச்சொல் பதினெட்டாம் நூற்றாண்டில் மறுவாழ்வு பெற்று நவீனப் பாட்டாளி வர்க்கத்தைக் குறிக்கும் சொல்லாயிற்று.

மே நாள் உலகு தழுவிய அளவில் முக்கியத் துவம் பெறுவதற்கு மூன்று காரணங்கள் இருந்தன.

1. அமெரிக்க நாட்டு சிகாகோ நகரில் 1886 ஆம் ஆண்டு மே முதல் நாள் நடந்த தொழிலாளர் போராட்டம். அதன் மீது காவல் துறையின் துப்பாக்கிச் சூடு, தொழிலா ளர்கள் சாவு அதைக் கண்டனம் செய்ய சிகாகோவின் ஹேமார்க்கெட் சதுக்கத்தில் 1886 மே 4 ஆம் நாள் நடந்த ஆர்ப்பாட்டம் - அதன் மீது துப்பாக்கிச் சூடு அதை யொட்டி சதி வழக்கு தொழிலாளர் தலைவர்களுக்குத் தூக்கு ! உலகு தழுவிய கண்டனக் குரல் எழுந்தது.

2. 1889 ஜூலையில் பாரிசில் நடந்த பன்னாட்டு சோஷலிசப் பேராயம் *(International Socialist Congress)* 1890 ஆம் ஆண்டு மே முதல் நாளை உலகெங்கும் உழைக்கும் மக்கள் உரிமை கோரும் நாளாகக் கடைப் பிடித்து ஆர்ப்பாட்டங்கள் நடத்துவது என்று முடிவு செய்தது.

3. 1890 மே முதல் நாள் உலகின் பல்வேறு நாடுகளில் மிகவும் ஆற்றல் வாய்ந்த ஆர்ப்பாட்டங்கள் மூலம் மே நாள் கொண்டா டப்பட்டது. பல்வேறு தொழிலா ளர் அமைப்புகள் இனி ஆண்டுதோறும் மே முதல் நாளை மே நாளாகக் கொண்டாடுவது என்று முடிவு செய்தன.

## சிகாகோவில் நேர்ந்த துயரம்

அமெரிக்க நாட்டு - தொழிற்சங்கங்களின் பேராயம் - (பின்னர் அதன் பெயர் "அமெரிக்கத் தொழிலாளர் கூட்டமைப்பு" என்று மாற்றப்பட்டது) எட்டு மணி நேர வேலை கோரி 1886 மே முதல் நாள் தொடங்கி பொது வேலை நிறுத்தம் செய்வதென்று முடிவு செய்தது.

1886 மே முதல் நாள் சனிக்கிழமை அமெரிக்க நாட்டின் தொழில் நகரங்களான நியூயார்க் சிகாகோ, ஃபிலடெல்ஃபியா, மில்வாவ்கீ, சின்சின்னாட்டி, லூயிஸ் வில்லி, பால்டி மோர் போன்ற நகரங்களில் சுமார் மூன்றரை லட்சம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர்.

அப்போதே சுமார் பத்து லட்சம் மக்கள் வசித்த சிகாகோ நகரம் பெரிய தொழில் மையமாக விளங்கியது. அது ஒரு பெரிய தொடர்வண்டி சந்திப்பு நிலையமும் ஆகும். அங்கு 1886 மே முதல் நாள் மூன்றில் இரண்டு பங்கு தொழிலகங்கள் மற்றும் கடைகள் மூடப்பட்டன. அங்குள்ள மிச்சிகன் அவெனியுவில் 40 ஆயிரம் தொழி லாளர்கள் கலந்து கொண்ட ஆர்ப்பாட்டம் நடந்தது. அந்த கர்ப் பூங்காவில் 25 ஆயிரம் தொழிலாளர்கள்திரண்டனர்.

03.05.1886 - திங்கட்கிழமை சிகாகோவில் உள்ள மக்கார்மிக் அறுவடை எந்திர ஆலை வாயிலில் அவ்வாலைத் தொழிலாளர்கள் திரண்டனர். முதலாளியால் அவ்வாலைக் கதவடைப்பு *(Lock - Out)* செய்யப்பட்டு பல நாட்களாக மூடிக்கிடந்தது. முதலாளி காவல் துறையினரை, வரவழைத்தார். காவலர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இரண்டு தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர். 50 தொழிலாளர்கள் படுகாய முற்றனர்.

மேற்கண்ட துப்பாக்கிச் சூட்டைக் கண்டித்து 04.05.1886 செவ்வாய் மாலை சிகாகோவின் ஹேமார்க்கெட் சதுக்கத்தில் கண்டனப் பேரணி நடத்த தொழிற்சங்கத் தலைவர்கள் அழைப்பு விடுத்தனர். 04.05.86 மாலை ஹேமார்க்கெட் சதுக்கத்தில் சுமார் மூவாயிரம் தொழிலாளர்கள் திரண்டனர்.

கண்டனப் பேரணியில் சிகாகோ நகர மேயர் ஹாரிசான் பார்வையாளராகக் கலந்து கொண்டார். பேரணியில், ஆகஸ்ட் ஸ்பைபஸ் என்ற தொழிற்சங்கத்



படிப்பகம்

www.padippakam.com

தலைவர் பேசினார். முதல் நாள் துப்பாக்கிச் சூட்டில் 'இரண்டு பேர் கொல்லப்பட்டதற்கு பொறுப்பு மக்கார்மிக் முதலாளி தான் என்று குற்றம் சாட்டினார் ஸ்பைஸ். ஆகஸ்ட் ஸ்பைஸ் ஜெர்மன் நாட்டிலிருந்து அமெரிக்காவில் குடியேறியவர். அவர் "அர்பெய்ட்டர் ஜெய்துங்" என்ற இதழின் ஆசிரியர் ; சோஷலிஸ்ட் தொழிலாளர் கட்சியின் உறுப்பினர்.

இரவு 9.00 மணிக்கு மேல் ஆல்பர்ட் பார்சன்ஸ் தம் மனைவி மற்றும் தங்கள் இரு குழந்தைகளுடன் வந்து அப்பேரணியில் கலந்து கொண்டார். "தொழிலாளர்களின் குறைந்த பட்ச நியாயமான கோரிக்கைகளை குண்டாந்தடிகள் மூலமும் துப்பாக்கிக் குண்டுகள் மூலமும் சந்திப்பவர்கள் எந்தக் காலத்திலும் மனிதத்தன்மை அற்றவர்களாகக் கருதப் படுவார்கள்" என்று தம் பேச்சில் குறிப்பிட்டார் பார்சன்ஸ். ஆல்பர்ட் பார்சன்ஸ் சிகாகோ தொழிற் சங்கப் பேரவையின் தலைவராக இருந்தார்.

சோஷலிஸ்ட் தொழிலாளர் கட்சி 1879 ஆம் ஆண்டின் குடியரசுத் தலைவர் தேர்தலில் தன் வேட்பாளராக பார்சன்ஸை நிறுத்தியது. அப்போது அவருக்கு 35 வயது நிறைவடையாததால் அவர் தேர்தலில் நிற்க முடியவில்லை. பார்சன்ஸ் தம் சொற்பொழிவை முடித்துவிட்டு பக்கத்தில் உள்ள உணவு விடுதிக்கு சென்றார். சாமுவேல் ஃபீல்டன் பேச எழுந்த போது மழை பெய்யத் தொடங்கியது. கூட்டம் கொஞ்சம் கொஞ்சமாகக் கலைந்தது. மேயரும் புறப்பட்டுச் சென்று விட்டார்.

இரவு 10 மணியளவில் கேப்டன் போன் ஃபீல்டு என்ற காவல் அதிகாரி தலைமையில் ஒரு பெரிய காவல் பட்டாளம் ஹேமார்க்கெட் கூட்டத்துக்குள் புகுந்தது. இதைப் பார்த்த சாமுவேல் ஃபீல்டன் கூட்டம் அமைதியாக நடந்து கொண்டிருக்கும்போது இவ்வளவு பெரிய போலீஸ் படை ஏன் வருகிறது என்று கேட்டார். அப்போது ஒரு குண்டு காவலர்கள் பக்கம் வெடித்தது. ஒரு காவலர் இறந்தார் ; மற்றுஞ்சிலர் காயமடைந்தனர். உடனே காவல் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். தொழிலாளர்கள் சிலர் இறந்தனர். பலர் காயமுற்று ரத்தம் சொட்டச் சொட்டத் தெருவில் கிடந்தனர்.

ஹேமார்க்கெட் சதுக்க சம்பவத்தை ஒரு சாக்காகப் பயன்படுத்திக் கொண்டு அடக்கு முறைகளைக் கட்டவிழ்த்து விட்டது அரசு. சிகாகோ தொழிற்சங்கத் தலைவர்கள் கைது செய்யப் பட்டனர். மக்கள் அமைப்புகள் தடை செய்யப்பட்டன. செய்தித்தாள் அலுவலகங்கள் மூடப்பட்டன. சதி மற்றும் கொலைக் குற்றச்சாட்டில் எட்டுபேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

வெடிகுண்டு வெடித்த போது ஹேமார்க்கெட் சதுக்கத்தில் இருந்த தலைவர் சாமுவேல் ஃபீல்டன் ஒருவர் மட்டுமே. அவர் கைது செய்யப்பட்டார். அவர் இங்கிலாந்திலிருந்து அமெரிக்காவில் குடியேறியவர். மேலும் ஆகஸ்ட் ஸ்பைஸ், ஜெர்மனிலிருந்து சிகாகோவில் குடியேறிய மிக்கயில் சுவாப் அமெரிக்கரான ஆஸ்கர் நீபி, ஜெர்மானியர்களான அடாலிஃப் ஃபீஸ்ஸர் மற்றும் ஜார்ஜ் எங்கெல், இங்கிலாந்துக்காரரான லூயிஸ் லிங்க் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். ஆல்பர்ட் பார்சன்ஸ் சிகா கோவி லிருந்து வெளியேறிவிட்டதால் காவலர்களால் அவரைக் கைது செய்யமுடியவில்லை. ஆனால் ஜூன் 21ல் வழக்கு விசாரணை தொடங்கிய போது, பார்சன்ஸ் தாமாகவே முன்வந்து நீதிமன்றத்திற்குள் தம் தோழர்களுடன் சேர்ந்து கொண்டார். அதன் பிறகே கைது செய்யப்பட்டார்.

இரண்டு மாதங்களுக்கு மேல் விசாரணை நடந்தது. தண்டனை கொடுத்தே ஆக வேண்டும் என்று அரசுத் தரப்பில் சொல்லப்பட்டது. குற்றம் நிரூபிக்கப்படவில்லை. வெடிகுண்டு வீசியவர் யார் என்றும் கண்டுபிடிக்கப்படவில்லை. வெடிகுண்டு வீசி ஆத்திரமூட்டும் செயலை அரசே செய்தது என்று தொழிலாளர்கள் ஏற்கெனவே குற்றஞ் சாட்டியிருந்தனர். இருந்தும் மற்றவர்களுக்குப் பாடம் புகட்டுவதாகச் சொல்லி 7 பேருக்குத் தூக்கும் ஆஸ்கா நீபிக்குப் பதினைந்து ஆண்டுகள் சிறையும் விதிக்கப்பட்டது.

இந்தத் தண்டனைக் கெதிராக உலகெங்கும் கண்டனக்குரல் எழுந்தது. பார்சன்ஸ் மனைவி தம் இரு குழந்தைகளுடன் அமெரிக்காவின் 16 மாநிலங்களுக்குச் சென்று மக்களைச் சந்தித்து நீதி கேட்டார். ஒரு பணக்கார இளம்பெண் தூக்குத் தண்டனை பெற்ற ஆகஸ்ட் ஸ்பைசைத் திருமணம் செய்து கொண்டார். திருமணம் செய்து கொண்டால் தூக்குத் தண்டனையிலிருந்துஸ்பைஸ் தப்பிக்கலாம் என்று அவர் திருமணம் செய்துகொண்டார்.

ஆங்கில எழுத்தாளர்களான பெர்னார்ட்ஷா, ஆஸ்கார் ஒயில்டு, பிரஞ்சு நாடாளுமன்ற உறுப்பினர்கள், ரஷ்யா, இத்தாலி, ஸ்பெயின், பிரான்ஸ், ஹாலண்டு போன்ற நாடுகளின் தொழிற்சங்கங்கள், நாடாளுமன்ற உறுப்பினர் கள் என பலவகைப்பட்ட முக்கியப் பிரமுகர்கள் நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராகக் குரல் கொடுத்தார்கள்.

உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டது. ஃபீல்டன் சுவாப் இருவர் தூக்கும் ரத்துச் செய்யப்பட்டு ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டது. எட்டுப் பேர்களுள் மிகவும் இளையவரான லூயிஸ் லிங்க் சிறைக் கொட்டடிக்குள் ஒருநாள் இறந்து கிடந்தார். எஞ்சிய பார்சன்ஸ், ஸ்பைஸ், எங்கெல், ஃபீஸ்ஸர் நால்வர்க்கும் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டு ஆறு ஆண்டுகள் கழித்து, 1893ல் இல்லிநாய்ஸ் மாநில ஆளுநராக வந்த ஜான் ஆல்ட்கெல்டு, சிறையில் இருந்த ஆஸ்கார் நீபி, ஃபீல்டன், சுவாப் மூவரையும் மன்னித்து விடுதலை செய்தார். மேலும் "இந்த வழக்கில் நியாயமற்ற முறையில் விசாரணையும் தீர்ப்பும் வழங்கப்பட்டது. அரசியல் மயக்கம் நாட்டை



படிப்பகம்

www.padippakam.com

ஆட்டிப்படைத்திருக்கிறது'' என்று அவர் கூறினார்.

தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்ட பின் அவர்கள் புதைக்கப்பட்ட இடத்தில் தொழிலாளர்கள் நினைவுச் சின்னம் எழுப்பினர். அச்சின்னத்தின் மேல் பகுதியில் ''சிகாகோ தியாகிகள்'' என்று எழுதி வைத்தனர். அதன் கீழே, தூக்கு மாட்டுவதற்கு முன் ஸ்பைஸ் பேசிய கடைசி வார்த்தைகளைப் பொறித்து வைத்தனர்.

**“ஒரு காலம் வரும் ; அப்போது நீங்கள் போடுகின்ற கூச்சலை விட எங்கள் மவுனம் அதிக ஆற்றல் பெற்றிருக்கும்''.** ●

- நிகரன்

## தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சீர்கேடுகளைக் கண்டித்து தமிழக இளைஞர் முன்னணி ஆர்ப்பாட்டம்

தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் லஞ்சம் தாண்டவமாடுகிறது. அங்கு இலவசமாகச் செய்ய வேண்டிய அறுவை சிகிச்சைகளை சில மருத்துவர்கள் - நோயாளிகளை பயமுறுத்தி - தங்களது தனியார் மருத்துமனைகளில் அவர்களைச் சேர்த்து பத்தாயிரக் கணக்கில் பணம் வாங்கிக் கொண்டு - அறுவை சிகிச்சை செய்கின்றனர்.

புதிதாக நோயாளிகளின் பெருக்கத்திற்கேற்ப மருத்துவர்கள் எண்ணிக்கையை அதிகப்படுத்தவில்லை. பணி ஓய்வு, இடமாற்றம் போன்றவற்றால் ஏற்படும் காலி இடங்களுக்கும் மருத்துவர்களை நியமிப்பதில்லை.

இக்கேடுகளால், புதிய புதிய கருவிகள் வாங்கப்பட்டும் கூட தரமான சிகிச்சை நோயாளிகளுக்குக் கிடைக்கவில்லை.

அத்துடன், மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையின் மூன்றாவது வாயிலை நிர்வாகத்தினர் நிரந்தரமாகப் பூட்டிவிட்டனர். இதனால் மருத்துவ மனை ஓரமாக இதுவரை, நின்று-புறப்பட்ட நகர்ப் பேருந்துகள் எட்டி நிற்க வேண்டியுள்ளது. நோயாளிகள் அதிக தூரம் நடந்து மருத்துவ மனைக்குள் செல்ல வேண்டியுள்ளது.

இச் சீர்கேடுகளைக் கண்டித்து தஞ்சை நகரத் தமிழக இளைஞர் முன்னணி தோழர். சந்திரசேகர் தலைமையில் 27.04.98 அன்று கண்டன ஆர்ப் பாட்டமும் நடத்தினர்.


ஆர்ப்பாட்டத்தின் போது, தோழர்கள் பழ. இரா. இராஜேந்திரன் (த.தே.பொ.க. நகரச் செயலாளர்) நா. வைகறை (த.இ.மு. நகரச் செயலர்), ம. செந்தமிழன் (தமி ழக மாணவர் முன்னணி) ஆகியோர் பேசினர். இறுதியில் 3-வது வாயில் பூட்டை இளைஞர்கள் உடைத்தனர்.

அவர்களைக் கைது செய்வதாக காவல் ஆய்வாளர் அல்மாஸ் அலி அறிவித்தார். இளைஞர் களைக் கைது செய்வதைக் கண்டித்து வணிகர் சங்கம் உடன் கடையடைப்பு செய்தது. கைது முயற்சியைக் காவல் துறை கைவிட்டது. □

தமிழர் கண்ணோட்டம் அறக்கட்டளையின்

## *காவிரி கணிப்பொறி அச்சு*

## திறப்பு விழா.



தமிழர் கண்ணோட்டம் அறக்கட்டளை சார்பில் தஞ்சையில் கணிப்பொறி அச்சு நிறுவுவதற்காகக் கடந்த சில மாதங்களாக நன்கொடை திரட்டப்பட்டது.

தமிழர் கண்ணோட்டம் வாசகர்களும் தமிழர் நலம் நாடும் நெஞ்சினரும் நமது முயற்சிக்குத் தாராளமாக நிதி உதவி செய்தனர்.

04.05.98 திங்கள் காலை 10 மணிக்கு, தஞ்சாவூர் நீதிமன்றச் சாலையில் உள்ள ராஜா வளாகத்தில் “காவிரி கணிப்பொறி அச்சு” என்ற பெயரில் அமைந்த, தமிழர் கண்ணோட்டம் அறக்கட்டளை அச்சு திறப்பு விழா நடந்தது.

விழாவிற்கு வழக்குரைஞர் தஞ்சை அ. இராமமூர்த்தி அவர்கள் தலைமை தாங்கினார்கள். அறக்கட்டளைத் தலைவர் தோழர் பெ. மணியரசன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

மாணவர் நகலகம் நிறுவனரும் 'நந்தன்' இதழ் ஆசிரியருமான திரு நா. அருணாசலம் அவர்கள் காவிரி கணிப்பொறி அச்சைத் திறந்து வைத்தார்கள். நகல் பொறியை (ஜெராக்ஸ்) யும் இயக்கிவைத்தார்கள்.

அறக்கட்டளையின் பொருளாளர் தோழர் இராசேந்திர சோழன் சிறப்பு விருந்தினர்களுக்குத் துண்டு அணிவித்தார். அறக்கட்டளையின் செயலாளர் தோழர் க.பழநிமாணிக்கம் நன்றியுரை, கூறினார்.

முன்னதாக மாணவர் நகலகம் கணிப்பொறி பொறியாளர் அறிவழகன் கணிப்பொறியில் மென்பொருள்களைப் பொருத்தினார்.

நெய்வேலி கரன் கணினி உரிமையாளர் பொறியாளர் முத்துலட்சுமி செங்குட்டுவன் அவர்களும் பொறியாளர் செங்குட்டுவன் அவர்களும் கணிப்பொறியை இயக்குவதற்குத் தகுதிப்படுத்தியதுடன் முதல் அச்சுப்படியும் எடுத்தனர்.

நகரின் முக்கியப் பிரமுகர்களும் நண்பர்களும் த.தே.பொ.க. தோழர்களும் விழாவில் திரளாகத் கலந்து கொண்டனர்.



படிப்பகம்

www.padippakam.com

## எழுச்சிமிகு மே நாள் கொடியேற்ற நிகழ்ச்சிகள்

**தஞ்சை நகரம் :**

த.தே.பொ.க. தலைமையகத்தில் 01.05.98 காலை 8.00 மணிக்கு கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் பெ. மணியரசன் செங்கொடி ஏற்றி மே நாள் கொடியேற்றத்தைத் தொடக்கி வைத்தார்.

ஒருவேனில் தோழர்கள் பெ. மணியரசன் க. பழநி மாணிக்கம் (மாவட்டச் செயலாளர்) த.கா. பரமசிவம் (பொதுக்குழு உறுப்பினர்) பழ. இராசேந்திரன் (நகரச் செயலாளர்) இரா.சு. முனியாண்டி (த.இ.மு. நகரச் செயலாளர்) சந்திரசேகர் (நகரத் தலைவர் த.இ.மு.) முத்துராசு (நகர செயற்குழு) உள்ளிட்ட பல தோழர்கள் ஒவ்வொரு கிளையாகச் சென்று கொடி ஏற்றினர்.

டான்டெக்ஸ் பனியன் தொழிற்சாலை வாயில், கௌதம சாயத் தொழிற்சாலை வாயில். தென் வெட்டுக்காரத் தெரு, கோரி குளம் புதுத்தெரு, அண்ணா நகர் முனியாண்டவர் காலனி பாத்திமா நகர் பூக்கார லாயம், புதிய பேருந்து நிலையம் கலைஞர் கருணாநிதி நகர், அன்னை சிவகாமி நகர், சாந்தப் பிள்ளை வாயில், பழைய பேருந்து நிலைய பழக்கடை ஆகிய இடங்களில் கொடியேற்ற நிகழ்ச்சிகள் எழுச்சியுடன் நடந்தன.

**பூதலூர் ஒன்றியம் :**

பூதலூர் ஒன்றியத்தில் தோழர் இராசேந்திர சோழன் (த.தே.பொ.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர், தலைமையில் தோழர்கள் குழ. பால்ராசு (ஒ.செ.கு.), இரெ. கருணாநிதி (ஒ.செ.கு.) கே. சுப்ரமணியம் (ஒ.செ.கு.) கு. மாணிக்கம் (ஒ.செ.கு.) இமான் சேகர் (ஒ.செ.கு.) பிச்சை (ஒ.செ.கு.) உள்ளிட்ட தோழர்கள் ஒரு வேனில் சென்று அங்கங்கே கொடி ஏற்றினர்.

திருக்காட்டுப்பள்ளி, பழமாநேரி, ஆர்க்காடு, முல்லக் குடி, நந்தவனப்பட்டி, புதுப்பட்டி, செங்கிப்பட்டி, அயோத் திப்பட்டி, வன்னியம்பட்டி, ஆச்சாம்பட்டி, பாலையப்பட்டி, துருசுப்பட்டி, காதாட்டிபட்டி, வளம்பகுடி, புதுக்குடி சாலை, புதுக்குடி, காமாட்சிபுரம், வெண்டயம்பட்டி, கரியப்பட்டி, சானூரப்பட்டி, மண்பாடி லாரித் தொழிலாளர்கள் சங்கம் ஆகிய இடங்களில் செங்கொடி ஏற்றினர். எல்லா இடங்களிலும் திரளாகத் தோழர்களும் நண்பர்களும் குழுமி இருந்தனர்.

**திருவையாறு ஒன்றியம் :**

தமிழக இளைஞர் முன்னணி பொதுச் செயலாளர் தோழர் நா. வைகறை மற்றும் த.தே.பொ.க. திருவையாறு ஒன்றியச் செயலாளர் தோழர் சி. அன்பழகன், தோழர்கள் சக்திவேல், ந. செல்வம், புதியவன் உள்ளிட்ட தோழர்கள் ஒரு வேனில் சென்று கண்டமங்கலம், மகாராஜபுரம், மருவூர், செந்தலை, நடுக்காவேரி, குழிமாத்தூர், கடமங்குடி திருவாலம் பொழில், திருப்பூந்துருத்தி ஆகிய ஊர்களில் செங்கொடி ஏற்றினார். அங்கங்கே உற்சாகமாகத் தோழர்களும் மக்களும் கலந்து கொண்டனர்.

**தஞ்சை ஒன்றியம் :**

தோழர்கள் த.கா. பரமசிவம் (த.தே.பொ.க. பொதுக்குழு) பி. முருகையன் (ஒன்றியச் செயலர்) மற்றும் தோழர்கள் ஒரு ஆட்டோவில் சென்று வல்லம் புதூர், திருமலைசமுத்திரம் தங்கப்ப உடையான் பட்டி, குருங்குளம், வாகரக் கோட்டை, பிலாக்கன் சாவடி, உமையவள் ஆர்க்காடு, திட்டை, புண்ணிய நல்லூர் ஆகிய ஊர்களில் மே நாள் கொடி ஏற்றினர். எல்லா இடங்களிலும் மக்கள் ஆர்வமாகக் குழுமியிருந்தனர்.

**மயிலம் ஒன்றியம் :**

திண்டிவனம் மயிலம் ஒன்றியத்தில் தோழர் ம. பாபு (த.தே.பொ.க. பொதுக்குழு உறுப்பினர்) தலைமையில் 100க்கும் மேற்பட்ட மிதிவண்டிகளில் செங்கொடிகளைக் கட்டிக் கொண்டு அணிவகுத்துச் சென்று எழுச்சியுடன் ஒவ்வொரு இடத்திலும் மே நாள் கொடி ஏற்றினர். மயிலத்தில் இம் மிதிவண்டிப் பேரணியை வழக்குரைஞர் தோழர் த. பவனந்தி (த.தே.பொ.க.) தொடங்கி வைத்து உரையாற்றினார்.

மயிலம், தென்கொளப்பாக்கம், கொரளூர், பெரும்பாக்கம், பரிக்கல் பட்டு, ஆதனப்பட்டு, வெளியனூர் ஆகிய ஊர்களில் செங்கொடி ஏற்றினர். எல்லா ஊர்களிலும் மக்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

**சோத்துப்பாக்கம் :**

சோத்துப்பாக்கம் பகுதி கீழ் மருவத்தூரில் 06.05.98 அன்று மே நாள் கொடி ஏற்றமும் பொதுக்கூட்டம் நடந்தது.

தோழர் ச. யோகநாதன் (த.தே.பொ.க. தலைமை செயற்குழு) சிறப்புரையாற்றினார். மற்றும் சோத்துப்பாக்கம் தோழர்களும் உள்ளூர்த் தோழர்களும் பேசினர்.

**சென்னை :**

சென்னை பக்தவத்சலம் நகர் கிளை சார்பில் 01.05.98 காலை 10.00 மணிக்கு தோழர் ஆறுமுகம் தலைமையில் செங்கொடி ஏற்றுவிழா நடந்தது. தோழர் ச. யோகநாதன் கொடியேற்றி சிறப்புரையாற்றினார்.

**சிதம்பரத்தில் :**

சிதம்பரம், சபாநாயகம் வீதியில் தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியின் மே நாள் கொடியேற்று விழா மே 1 ஆம் நாள் நடைபெற்றது. தோழர் கு. சிவப்பிரகாசம் தலைமை தாங்க தோழர் ம.கோ. தேவராசன் கட்சிக் கொடியை ஏற்றி வைத்தார்.தெற்கு மாங்குடியில் த.தே. பொ.க. கொடியை தோழர் பெ. சவுந்தரராசன் ஏற்றி வைத்தார்.

**திருத்துறைப்பூண்டி :**

மே தினத்தில் திருத்துறைப்பூண்டி ஒன்றியத் தில், வங்க நகர், பாமணி, மணலி தண்டலைச்சேரி, செம்பிய வேளூர், தொழுதூர் ஆகிய பகுதிகளில் வேன்மூலம் தோழர்கள் சென்று கொடியேற்றி விளக்க தெருமுனை கூட்டமும் நடத்தினர். சிறப்பு விருந்தினராக த.தே.பொ.க. தலைமைச் செயற்குழு தோழர் அ. பத்மநாபன் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார். ✡



படிப்பகம்

www.padippakam.com

## தோழர் பாவாணன் அவர்களை விடுதலை செய்யக் கோரி பட்டினிப் போராட்டம்

சிறந்த தமிழ் இன உணர்வாளரும் ம.தி.மு.க. வின் கொள்கை விளக்க அணி துணைச் செயலாளருமான தோழர் இரா. பாவாணன் அவர்களைத் தமிழக அரசு தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சென்னைச் சிறையில் அடைத்துள்ளது.

தமிழ் ஈழ ஆதரவாளரான அவர் மீது பொய்க்குற்றச் சாட்டுகள் சுமத்தி எதேச்சாதிகாரச் சட்டத்தின் கீழ் சிறை வைத்துள்ளனர்.

தோழர் பாவாணன் அவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தி 22.04.98 அன்று புதுக்கோட்டைப் பழைய பேருந்து நிலையம் அருகில் பட்டினிப் போராட்டம் நடந்தது. தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சித் தோழர் மா.ச. மாரிமுத்து தலைமையில் நடந்த பட்டினிப் போராட்டத்தை ம.தி.மு.க இலக்கிய அணிச் செயலாளர் தோழர் கே.எம். சரீப் தொடங்கி வைத்துப் பேசினார்.

ம.தி.மு.க. இலக்கிய அணித் துணைச் செயலாளர் இரா. கிள்ளிவளவன், தமிழர் தேசிய இயக்க மாநில துணைத் தலைவர் புலவர் துரை. மதிவாணன், ம.தி.மு.க. திருமயம் ஒன்றியச் செயலாளர் பழ. பஞ்சு, திருவறங்குறம் ஒன்றியச் செயலாளர் சி.தமிழ்க்குமரன், த.நா.மா.லெ.க. மாவட்டத் தலைவர் விடுதலைக் குமரன் உள்ளிட்ட பலர் கண்டன உரை ஆற்றினர்.

இறுதியில் த.தே.பொ.க. பொதுச் செயலாளர் பெ. மணியரசன் பட்டினிப் போராட்டத்தை முடித்து வைத்து உரையாற்றினார்.

கணிசமானப் பெண்களும் கலந்து கொண்ட இப்பட்டினிப் போராட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## "நந்தன்" விழா

நந்தன் மாதமிருமுறை இதழின் முதலாமாண்டு நிறைவு விழா சென்னை காமராசர் அரங்கில் 09.05.98 அன்று மாலை எழுச்சியாகவும் எடுப்பாகவும் நடந்தது.

புஷ்பவனம் குப்புசாமியின் தமிழ்த்தாய் வாழ்த்துக்குப் பின், சிறப்பாசிரியர் பேராசிரியர் சுபவீர பாண்டியன் வரவேற்புரை நிகழ்த்தினார். விழாவிற்கு தலைமை தாங்கிய திரு. பழ. நெடுமாறன் அவர்கள் விழாவைத் தொடங்கி வைத்து உரையாற்றினார். சிலம்பொலி செல்லப்பன், பொன். சத்தியநாதன் (ஆஸ்திரேலியா) கோவை இராமகிருட்டிணன் ஆகியோர் உரையாற்றினர். பேரா. பெரியார்தாசன் நிறைவுரையாற்றினார். நந்தன் ஆசிரியர் நா. அருணாசலம் அவர்கள் நன்றி நவின்றார்.

இடையில் திரு நா. அருணாசலம் எழுதிய "நெஞ்சின் அலைகள்" நூலை ஆனூர் செகதீசன் வெளியிட கலைப்புலி எஸ். தாணு பெற்றுக் கொண்டார். அடுத்து "ராஜீவ் கொலை மறைக்கப்பட்ட உண்மைகள்" என்ற தலைப்பில் விடுதலை ராசேந் திரன் தொகுத்த நூலை திரு. பழ. நெடுமாறன் வெளியிட சுப.வீ., பெ. மணியரசன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

கோபி தாய்த் தமிழ்ப்பள்ளி மழலையர் பிரிவு சிறுமிகள் (குழந்தைகள்) ஆடிய நாட்டியம் அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. பார்வையாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு தென்கச்சி சுவாமிநாதனும் தியாகுவும் விடையளித்தார்கள். அரங்கம் நிரம்பி வழிந்து அலை மோதியது கூட்டம்.

## பா.ஜ.க. அரசு வெடித்த அரசியல் அணுகுண்டு

பா.ஜ.க. அரசு 11.05.98 அன்று ராஜஸ்தான் பாலைவனப் பொக்ரான் பகுதியில் மூன்று அணுகுண்டுகளை வெடித்துச் சோதனை செய்துள்ளது.

பெரும்பான்மையின்றி, கூட்டணிக் கட்சிகளின் இழுப்பு வேலைகளால் தள்ளாடிக் கொண்டிருக்கும் பா.ஜ.க. அரசு உள்நாட்டில் அரசியல் நிலைத் தன்மையை உருவாக்கிக் கொள்ள ஒரு மனவியல் உத்தியாகவே அணுகுண்டு சோதனை நடத்தியுள்ளது. இதன்மூலம் தனது பலத்தை செயற்கையாக காட்ட பா.ஜ.க முனைந்துள்ளது. இதே போக்கில், உள்நாட்டுப் பாதுகாப்பு வெளிநாட்டு அச்சுறுத்தல் என்ற செய்திகளை மிகைப்படுத்தி, "இந்திய தேசிய" வெறியுணர்ச்சியைத் தூண்டிவிட அது முனைவதாகக் கருத இடமுண்டு. உள்நாட்டு ஜனநாயகத்திற்கு ஆபத்தாக இம்முயற்சி வளராமல் மக்கள் பார்த்துக் கொள்ள வேண்டும்.

அணுகுண்டு இந்தியா வைத்துக் கொள்ளலாமா என்ற சர்ச்சை இந்தியாவுக்குள் இருக்கிறது. இது ஒருபுறமிருக்க, அணுகுண்டுகளைக் கையில் வைத்திருக்கும் அமெரிக்கா, ரஷியா, சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் இந்தியாவைக் கண்டிக்கும் உரிமையை அறநெறி அடிப்படையில் இழந்துள்ளன என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். ✧



படிப்பகம்

www.padippakam.com

# ஓநாய்களுக்கு ஆடுகள் சொல்வது

- கண்மணி குணசேகரன்

ஓடை வாய்க்கால் தோட்டம் துரவு
இன்னும் இண்டு இடுக்கு ....
அடுப்பங்கரையில் முளைத்தாலும்
ஆச்சரியப்படுவதற்கில்லை.

வேலிக் கருவை, பீக்கருவை,
வேலிக்காத்தான்
இடத்திற்கு இடம், பேர்தான் வேறுவேறு.
எல்லா மண்ணிலும். எல்லா நாளிலும்
கொழுந்துவிட்டு துளிர்ப்பதில் நிகரற்றது.

70.வாக்கில் அமெரிக்காவிலிருந்து
இறக்குமதியானதாக பழமலய்
எழுதுகிறார்.

வல்லரசு நாடுகள், வளரும் நாடுகளை
குல்லாய் தைப்பது இப்படித்தான்.

வறட்சியைத் தாங்கி வளர்வது,
விறகுப் பஞ்சத்தைப் போக்குவது
கிடக்கட்டும்.
விளைவுகள் விபரீதமானவைகள்.

சுவாசிப்பதில் எல்லா தாவரங்களையும்
போல் அல்ல.
இந்த கருவைகள்.
மனிதனுக்குப் போட்டியாய்.
பிராண வாயுவை உள்ளிழுத்து
கரியமில வாயுவை விடுபவை.

பொருளாதார நெருக்கடி போன்றுதான்
இதுவும். காற்று நெருக்கடி. சூழல்
நெருக்கடி.

எரிவதை இழுத்தால், கொதிப்பது
அடங்கும்.
நம்ப ஆட்கள், கையேந்தி விட்டார்கள்.
"கழுத விட்ட கை நெறயா."

நாளை ..
நல்ல காற்றுக்கு, இதயம் ஏங்கிச் செத்து
கூன் குருடு, செவிடு, பிணி என வாழ்வு
சிக்கும்.
நிவாரணம் என்று அமெரிக்கா
ஆண்டையாகும்.
கடனுக்கு கையெழுத்துக் கேக்கும்.

ஏரி குளம் குட்டையில் யூக்ளிப்டஸ்
சனங்க சொல்வது தைல மரங்கள்.
பசுமை புரட்சி என்கிறது உலக வங்கி.
உறிஞ்சுவதில் நெய்வேலிக் காரனையே
மிஞ்சும்
வேறெந்த மரத்தையும் விட.
நிலத்தடி நீரை மட்டுமல்ல
காற்றில் உள்ள ஈரப்பதத்தையும்.

ஏற்கெனவே வறண்ட பூமி.
மேலும், இதை வறட்சிக்குள்ளாக்குவது.

நாளை.
வட்டிக்கு வட்டி போட்டு
குடிதண்ணீர் பொட்டலம் அனுப்பும்
உலக வங்கி.

வேண்டாம்.
எங்கள் ஏரிக்குளங்கள்
விழல் மண்டிப் போகட்டும்.
ஓடை வாய்க்கால்
சப்பாத்தி முளைக்கட்டும்.

சமூகக் காடுகள் என்பது
மனிதனை அரவணைத்து உயர்த்துவது.

அவனை.
அப்புறப்படுத்துவதற்காக
மரங்களை வளர்ப்பதும். உதவுவதும் ....

சமூகக் காடுகளை அல்ல.
சுடுகாடுகளை உற்பத்தி செய்வது !

www.padippakam.com



# தமிழர் தொழில் – வணிகப் பாதுகாப்பு மாநாடு

வடநாட்டு, பன்னாட்டு முதலாளிகளின் ஆக்கிரமிப்பால் பறிபோகி வரும் தமிழர் தொழில் மற்றும் வணிக உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கோடு, சென்னையில் "தமிழர் தொழில் - வணிகப் பாதுகாப்பு மாநாடு" நடைபெறுகிறது.

தமிழர் அமைப்புகளின் தலைவர்கள் பலரும், தொழில் முனைவோரும், வணிகர் அமைப்பின் தலைவர்களும், பொருளியல் அறிஞர்களும் பங்கேற்கின்றனர்.

அனைவரும் வருக!

**இடம் : ஜெர்மன் அரங்கம், தி. நகர் சென்னை**

**நாள் : ஜூலை 11 சனி, 1998**

– தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி

படிப்பகம்